உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமபுர ஆதீனத் திங்கள் வெளியீடு

ர் 19] சார்வரி ஆண்டு சித்திரைத்திங்கள் 10—5—60 [இதழ் 6

தருமபுர ஆதீனக் குருமுதல்வர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

உ

குருபாதம்

" ஞானசம்பந்தம் "

ஆசிரியர் :- வித்துவான். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள்

துணை ஆசிரியர் :- வித்துவான். மூத்து. சு. மாணிக்கவாசகன்

உட்பொருள்

		பக்கம்
1.	சிவஞானபோதம்	315
2.	பழந்தமிழ் நூல்களில் உயிர்வகைகள் ...	318
3.	கம்பராமாயணக் கலக்கமும் தெளிவும் ...	322
4.	அன்பும் இன்பமும்	325
5.	உடல் வளர்க்கும் மூலிகைகள்	329
6.	துன்பம் எது ?	332
7.	போற்றியுரை	336
8.	அம்மையார் மாட்சி	338
9.	இரண்டாம் இராசாதிராசனது திருவொற்றியூர்க் கல்லெழுத்து ...	341
10.	செய்திகள்	344
11.	திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு ...	351
12.	எதிர்காலம்	359

உ

குருபாதம்

தருமையாதீன மெய்த்தொண்டர்கள்

ஆய்வார் பதிபசு பாசத்தி னுண்மையை
யாய்ந்தறிந்து
காய்வார் பிரபஞ்ச வாழ்க்கையெல் லாங்கல்வி
கேள்வியல்லல்
ஒய்வார் சிவானந்த வாரியுள் ளேயோன்
றிரண்டுமறத்
தோய்வார் கமலையுண் ஞானப்ர காசன்மெய்த்
தொண்டர்களே.

— சம்பந்த சரணலயர்.

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்

ஸ்ரீ ஞானம்பிகா சமேத ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமிகோயில்

மகோற்சவப் பத்திரிகை

7—5—'60 முதல் 17—5—'60 முடிய

திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

குருபாதம்

சிவபெருமான்

சீர்கொண்ட ஆனந்த மாகி எங்கும்
    செறிவாகிப் பரமாகித் திரம தாகி
ஏர்கொண்ட கருணைத்திரு வுருவ மாகி
    எழில்கொண்ட மலைமகளை இடத்திற் கொண்டோன்
கார்கொண்ட நிறங்கொண்ட முகுந்த னுதிக்
    கடவுளர்வந் தடிபரவும் கடவுள் கொன்றைத்
தார்கொண்ட முடியனவன் அடியைத் தாழ்ந்து
    தாழாத பெருங்கதியில் வாழா நிற்பாம்.

தருமபுர ஆதீனக் குருமுதல்வர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

சீரணியும் நுதலின்விழி மழுமான் நாகம்
    திருந்தும்எரி பொருந்துவிடம் தெரிந்திடாமல்
தாரணி அன் பரையாள அவர்போல் வந்த
    சைவசிகா மணிஎவர்க்கும் தலைவன் எங்கோன்
காரணியும் நெடியபொழிற் கமலை வேந்தன்
    கருணைமழை பொழியும் இரு கடைக்க ணுளன்
பார்புகழும் ஞானசம் பந்தன் எந்தை
    பரமன்இரு சரணமலர் பரவி வாழ்வாம்.

(சம்பந்தசரணாலயர்)

உ

சிவமயம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்

ஸ்ரீ ஞானம்பிகா சமேத ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி கோயில்

மகோற்சவப் பத்திரிகை

பெருங்கருணைத் தடங்கடலாகிய சிவபெருமான் ஆன்மாக்கள் மீது வைத்த எல்லையில்லாப் பெருங்கருணையினாலே, காணாதஅருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய் நிகழ் குறியாம் சிவலிங்கமாகி திருவுருக்கொண்டு எழுந்தருளியிருக்கின்ற தலங்கள் பலவற்றுள் இந்திரன், அகத்தியர், தருமன், ஆகியோர்களால் பூசிக்கப்பெற்றதும் காவிரி முதலிய தீர்த்தங்களால் சிறப்புற்றதும், வில்வாரண்யம் என்னும் சிறப்புத் திருநாமம் உற்றதும், குருபீடஸ்தானமும் ஆகிய தருமபுரத்தின்கண் திருக்கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கின்ற **ஸ்ரீ ஞானம்பிகா சமேத ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமிக்கு** நிகழும் சார்வரி ஆண்டு சித்திரைத்திங்கள் 25-ஆவது நாள் (7—5—'60) சனிக்கிழமை தொடங்கி மகோற்சவம் நடைபெறும்.

திருநாட்களில் திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடும் இன்னிசை நிகழ்ச்சிகளும் நடைபெறும். சிவநேசச் செல்வர்கள் யாவரும் வந்திருந்து, திருவிழாக் காட்சியைத் தினமும் தரிசித்தும் சொற்பொழிவுகளைக் கேட்டும் இன்புறுக.

திருக்கயிலாய பரம்பரைத்
தருமபுர ஆதீனம்
கார்பார்,

தருமபுர ஆதீன மடாலயம்,
சார்வரி - சித்திரை 16.

சொக்கநாதத் தம்பிரான்.

ஆதீன மடாலயத் திருநெறிய தெய்வத் தமிழ் மன்றத்தில் மாநாட்டு நிகழ்ச்சிகள் நாள்தோறும் நடைபெறும்.

திருநாள் விவரம்

	தமிழ் ௵மீ௳	இங்கிலீஷ் ௳ மீ ௵	வாரம்	திரு நாள்	உற்சவ விவரம்
சார்வரி௵ சித்திரைமீ	24	6—5—60	சுக்கிரவாரம்		பூர நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் உதயாதி 31-58 நாழிகைக்குமேல் 37 நாழிகைக்குள் விருச்சிக லக்னத்தில் அனுக்ஞை, விக்நேசுவர பூஜை, வாஸ்து சாந்தி, மிருத்ஸங்கிரஹணம், அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம்.
	25	7—5—60	ஸ்திரவாரம்	1	உத்திர நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் உதயாதி 1நாழிகைக்குமேல் 4நாழிகைக்குள் விருஷபலக்னத்தில் ஸ்ரீஞானாம்பிகா சமேத ஸ்ரீ ஞானபுரீசுவர சுவாமிக்கு மஹோத்ஸவ துவஜாரோஹணம்.
	26	8—5—60	பானுவாரம்	2	கற்பகவிருக்ஷக் காட்சி.
	27	9—5—60	சோமவாரம்	3	பூதம், பூதகி, இடும்ப வாகனக் காட்சி

	28	10—5—60	மங்களவாரம்	4	நந்தி, காமதேனு, குதிரை வாகனக் காட்சி
	29	11—5—60	புதவாரம்	5	சகோபுர ரிஷப வாகனக் காட்சி.
	30	12—5—60	குருவாரம்	6	யானை, அன்னம், ஆட்டு வாகனக் காட்சி.
	31	13—5—60	சுக்கிரவாரம்	7	திருக்கல்யாண வைபவம், புஷ்ப விமானம் வெள்ளி ரதக்காட்சி.
வைகாசி	1	14—5—60	ஸ்திரவாரம்	8	குதிரை, கிளி, யானை வாகனக் காட்சி.
	2	15—5—60	பானுவாரம்	9	உதயத்திற்குமுன் மணி 5 க்குமேல் 5-57 க்குள் மேஷ லக்னத்தில் மகா ரதாரோகணம். திருத்தேர்.
	3	16—5—60	சோமவாரம்	10	காலே ஸ்ரீ சபாநாயகர் தீர்த்தங்கொடுத் தருளல். பிறகு பஞ்சமூர்த்திகளும் ரிஷபாரூடராய் எழுந்தருளிக் காவிரியில் தீர்த்தங்கொடுத்தருளல். இரவு துவஜாவ ரோஹணம்.
	4	17—5—60	மங்களவாரம்		மௌன உற்சவம்.
	5	18—5—60	புதவாரம்		சண்டேசுரர் உற்சவம்.

உ

குருபாதம்

நிகழ்ச்சிகள்

ஓவ்வொருநாளும் மாலை 6 மணிமுதல் நடைபெறும்

முதல் திருநாள் 7—5—60 சனிக்கிழமை

திருஞானசம்பந்தர் திருநாள்

தோடக்கவுரை

திரு: O. V. அளகேசன்,
தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர், சென்னை.

திரு. மீ. ப. சோமசுந்தரம்,
சொற்பொழிவு அமைப்பாளர், சென்னை வானொலி நிலையம்.

" ஞானப்பால் "

திரு. தொ. மு. பாஸ்கரத் தொண்டமான் M. A., I. A. S.,
(Retd. Dist. Collector.)

" உள்ளம் கவர்கள்வன் "

வித்துவான், திரு. வீ. உலகஊழியர்,
தமிழ் விரிவுரையாளர், அண்ணமலைப் பல்கலைக் கழகம்.

" விலையுடை அருந்தமிழ் "

வித்துவான், ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள்
சென்னை, தருமபுர ஆதீன சமயப் பிரசார நிலையம்.

" திருமுறைப்பண்கள் "

திருமுறைப் பண்ணிசையரங்கு
சங்கீதபூஷணம், திரு. P. சுவாமிநாதன்
தேவார இசைமணி, திரு. S. திருஞானசம்பந்தம்
குழுவினர்.

இரண்டாவது திருநாள் 8—5—60 ஞாயிற்றுக்கிழமை

திருநாவுக்கரசர் திருநாள்

திரு. சா. கணேசன், காரைக்குடி,

" திருக்கோயிற்கலை "

தருமையாதீனப் புலவர்

வித்துவான், திரு. சி. அருணைவடிவேல் முதலியார், காஞ்சீபுரம்

" திருநேரிசையும் திருவிருத்தமும் "

வித்துவான், திரு. க. வெள்ளைவாரணம்,

தமிழ் விரிவுரையாளர். அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

" திருக்குறுந்தொகை "

முத்தமிழ் வித்தகர், பண்டித,

வித்துவான், திரு. லெ. ப. கரு. இராமநாதஞ்செட்டியார்,

தமிழ்த்துறைத் தலைவர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

" தாண்டகவேந்தர் "

ஸ்ரீமத். சட்டைநாதத் தம்பிரான் சுவாமிகள்,

திருக்கடவூர் தேவஸ்தானம், கட்டளை விசாரணை.

" திருவடிப் பெருமை "

கதாகாலக்ஷேபம் **" திருநாவுக்கரசர் "**

வித்துவான், திரு. வை. மு. சண்முகதேசிகர்குழுவினர்

நாகப்பட்டினம்.

மூன்ருவது திருநாள் 9—5—60 திங்கட்கிழமை

சுந்தரர் திருநாள்

செந்தமிழ்ச்செல்வர், வாகீச கலாநிதி,

வித்துவான், திரு. கி. வா. ஜகந்நாதன் M. A.,

' கலைமகள் ' ஆசிரியர், சென்னை.

" நாவலர் காவலர் "

திரு. கீ. இராமலிங்க முதலியார் M. A.,
ஆட்சிமொழித்தனி அலுவலர், சென்னை.
" சுந்தரர் செந்தமிழ் "

தருமையாதீனப் புலவர், பண்டித,
வித்துவான், திரு. இராம. கோவிந்தசாமி பிள்ளை, திருவையாறு.
" திருக்கயிலை ஞான உலா "

வித்துவான், ஸ்ரீமத். சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள்
திருநள்ளாறு தேவஸ்தானம், கட்டளை விசாரணை.
" நான்மணிமாலையில் சுந்தரர் "

ஸ்ரீமத். மாணிக்கவாசகத் தம்பிரான் சுவாமிகள்,
திருக்குவளை தேவஸ்தானம், கட்டளை விசாரணை.
" திருக்கயிலைச் சிறப்பு "

இசையரங்கு

திரு. S. சோமாஸ்கந்தன் குழுவினர்
செம்பொனார்கோயில்.

நான்காவது திருநாள் 10—5—60 செவ்வாய்க்கிழமை

மாணிக்கவாசகர் திருநாள்

சொல்லின் செல்வர்,
டாக்டர், திரு. R. P. சேதுப்பிள்ளை B. A., B. L.,
தமிழ்த்துறைத் தலைவர், சென்னைப் பல்கலைக் கழகம்,
" திருவாசகமும் போப்பையரும் "

திரு. V. K. கிருஷ்ணமூர்த்தி M. L. A., வேலூர்.
" தெய்வத் தமிழ் "

திருமதி. சௌந்தரம் கைலாசம், சென்னை.
" மணிவாசகத்தில் பெண்மணிகள் "

புலவர். திரு. N. R. முருகவேள் M. A., M. O. L.,
தமிழ் விரிவுரையாளர், கிறித்துவர் கல்லூரி, தாம்பரம்,
" திருக்கோவையார் "

ஸ்ரீமத். சொக்கலிங்கத் தம்பிரான் சுவாமிகள்
வேளூர் தேவஸ்தானம், கட்டளை விசாரணை.
" திருவாசகத் தேன் "

இசையரங்கு

" ஏழிசைவல்லபி "
திருமதி. K. B. சுந்தராம்பாள் (M. L .C.) குழுவினர்

ஐந்தாவது திருநாள் 11—5—60 புதன்கிழமை

மெய்கண்டார் திருநாள்

வித்துவான், திரு. G. சுப்பிரமணிய பிள்ளை M. A., B. L.,
தமிழ் ஆராய்ச்சித்துறைத் தலைவர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.
" சிவஞானபோதம் "

திரு. பூ. ஆலாலசுந்தரம் செட்டியார் M. A.,
தமிழ்த்துறைத் தலைவர், கிறிஸ்தவர் கல்லூரி, தாம்பரம்.
" சித்தாந்த சைவம் "

சர்தார். திரு. வேதரத்தினம் பிள்ளை M. L. A.,
கஸ்தூரிபாய் மாணவியர் விடுதித் தலைவர், வேதாரண்யம்
" அறநெறி வாழ்க்கை "

வித்துவான், ஸ்ரீமத். மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள்
மௌனமடம் கட்டளை விசாரணை, திருச்சி.
" மெய்கண்டதேவர் "

ஸ்ரீமத். விசுவலிங்கத் தம்பிரான் சுவாமிகள்
திருவையாறு தேவஸ்தானம், கட்டளை விசாரணை,
" தவ ஒழுக்கம் "

இசையரங்கு

திரு. கே. சி. தியாகராசன் குழுவினர், திருச்சி

ஆருவது திருநாள் 12—5—60 வியாழக்கிழமை

அருணந்திதேவர் திருநாள்

வித்துவான், திரு. T. முத்து. கண்ணப்பர் B.A., M.L.C. சென்னை,
" அருணந்திசிவனுர் "

தருமையாதீனப் புலவர், முதுபெரும் புலவர்,
திரு. முத்து. சு. மாணிக்கவாசகன்
முதல்வர், தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி.
" சிவஞானசித்தியார் "

வித்துவான், திரு. சொ. சிங்காரவேலன்,
தமிழ்ப்பேராசிரியர், தருமையாதீனப் பல்கலைக்கல்லூரி.
" ஆசிரியர் அளிக்கும்விடை "

வித்துவான், ஸ்ரீமத். இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள்
திருபுவனம் தேவஸ்தானம், கட்டளை விசாரணை.
" ஐம்புல வேடர்கள் "

கதாகாலக்ஷேபமும் - குழலிசையும்

திரு. R. வேலாயுத ஓதுவார் குழுவினர், தருமபுரம்.
" அருணந்திதேவர் "

திருக்கண்ணபுரம், திரு. T. S. R. சீனிவாசபிள்ளை
குழுவினர் - புல்லாங்குழல்.

ஏழாவது திருநாள் 13—5—60 வெள்ளிக்கிழமை

மறைஞானசம்பந்தர் திருநாள்

திருமதி. T. N. அனந்தநாயகி B. A., B. L., M. L. A.
சென்னை.

" தென்னாட்டில் அறநிலையங்கள் "

தருமையாதீனப் புலவர்,
வித்துவான், திரு. ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை,
தமிழ் விரிவுரையாளர், தியாகராயர் கல்லூரி, மதுரை.

" தருமையும் மதுரையும் "

வித்துவான், திரு. ம. சிவசம்பு.
தமிழ்ப்பேராசிரியர், ஆதீனப் பல்கலைக்கல்லூரி, தருமபுரம்.

" அருட்செல்வம் வேண்டுமா ? "

வித்துவான், ஸ்ரீமத். முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள்,
திருப்பனந்தாள் தேவஸ்தானம் கட்டளை விசாரணை,

" மறைஞானசம்பந்தர் மாண்பு "

கதாகாலக்ஷேபம்

" ஸ்ரீ குருஞானசம்பந்தர் "
குமாரி, கௌரி குழுவினர், சென்னை.

எட்டாவது திருநாள் 14—5—60 சனிக்கிழமை

உமாபதிதேவர் திருநாள்

சைவ சித்தாந்த சரபம், மகாமகோபாத்யாய,
சிவஸ்ரீ. காசிவாசி, ஈசானசிவாசாரியார், பழனி.

" நெஞ்சுவிடுதூது "

செந்தமிழ்ச்செல்வி,

புலவர், திருமதி. ந. சி. குழந்தையம்மாள் M. L. A.

தமிழ் விரிவுரையாளர், நிர்மலா கல்லூரி, கோயம்புத்தூர்.

" சிவப்பிரகாசம் "

பல்கலைச்செல்வர்,

வித்துவான், திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளை M. A., B. L., M. O. L.

தமிழ்த்துறைத் தலைவர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

" திருவருட் பயன் "

திரு. S. மீனாட்சிசுந்தர முதலியார் B. A., L. T.,

தலைவர், கலைமகள் கல்வி நிலையம், ஈரோடு.

" மெய்ஞ்ஞானமும் விஞ்ஞானமும் "

இசையரங்கு

ரஞ்சிதகான இசைமணி, குன்றக்குடி, திருவண்ணாமலை ஆதீன இசைச்செல்வம், மதுரை,

திரு. சோமசுந்தரம் குழுவினர்

ஒன்பதாவது திருநாள் 15—5—60 ஞாயிற்றுக்கிழமை

கமலை ஞானப்பிரகாசர் திருநாள்

மகாவித்துவான், திரு. K. ஆறுமுக நாவலர்,

தலைவர், திருநெறித் தொண்டர் குழாம், நாகர்கோயில்.

" முப்பொருள் உண்மை "

வேதாந்தவித்தகர், டாக்டர், திரு. T.M.P. மகாதேவன் M.A., Phd.

தத்துவத்துறைத் தலைவர், சென்னைப் பல்கலைக் கழகம்.

" வேதாந்தமும் சித்தாந்தமும் "

திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை B. A., L. T.,

முன்னாள் கல்வித்துறை உதவி இயக்குனர், சென்னை.

" கல்வித்துறையில் கடவுள் நிலை "

திரு. ச. சிவகுமாரன், M. A., சென்னை.

" தருமையும் கமலையும் "

கதாகாலக்ஷேபம்

" மலைமகள் திருமணம் "

தருமையாதீன வித்துவான், கீர்த்தனகுலசேகர, சங்கீத சாகித்ய வல்லப, கதாரசாஸ்வாதக, பாகவதர், எம்பார்,

திரு. விஜயராகவாச்சாரியார் குழுவினர்.

திருவரங்கம்.

பத்தாவது திருநாள் 16—5—60 திங்கட்கிழமை

காலை 9 மணி

குருஞானசம்பந்தர் திருநாள்

திருக்குறள்வேள், திரு. G. வரதராஜம் பிள்ளை B. A.,

செயலாளர், கோவாபரேடிவ் சென்ட்ரல் பாங்கி, திருச்சி.

" சிவபோகசாரச் சிறப்பு "

திரு. P. R. சுவாமிநாதன் M. A., L. T.

தலைமை ஆசிரியர், R. C. T. உயர்நிலைப்பள்ளி, அண்ணமலைநகர்.

" சோக்கநாத வெண்பா "

தருமையாதீனப் புலவர்,

திரு. க. வச்சிரவேல் முதலியார் B. A., L. T.,

கணித ஆசிரியர், பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளி, காஞ்சிபுரம்

" முத்தி நிச்சயம் "

திருவாவடுதுறை ஆதீன வித்துவான், சித்தாந்த சைவமணி

திரு. த. ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளை

குடந்தை,

" குருஞானசம்பந்தர் "

திரு. கோ. சிவஞானம்,
ஆதீன சமயப்பிரசாரத் தொண்டர், திருக்கருகாவூர்.

" திருக்கோயில் வழிபாடு "

மாலை 4–30 மணி

வித்துவான், திரு. K. M. வேங்கடராமையா M. A., B. O. L.,
தலைவர், செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்.

" மாசிலாமணித் தேசிகர் மாண்பு "

சித்தாந்த வித்தகர்,
திரு. கயப்பாக்கம். சோமசுந்தரஞ்செட்டியார், சென்னை.

" சோக்கநாதக் கலித்துறை "

தருமையாதீனப் புலவர், திருவாவடுதுறை ஆதீன மகாவித்துவான்,
வித்துவான், திரு. ச. தண்டபாணி தேசிகர்
தமிழ் விரிவுரையாளர், அண்ணுமலைப் பல்கலைக் கழகம்.

" ஞானப்பிரகாசமாலை "

" கல்வெட்டாராய்ச்சிக் கலைஞர் "
வித்துவான், திரு. வை. சுந்தரேச வாண்டையார்
தமிழ் ஆராய்ச்சி விரிவுரையாளர், அண்ணுமலைப் பல்கலைக்கழகம்,

" திருக்கோயில்களில் கல்வெட்டு "

மாலை 6 மணிக்கு

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள்
காவிரித் திருமஞ்சனத்திற்கு எழுந்தருளிக்
குருமூர்த்த வழிபாடு செய்தருளல்

16—5—60 திங்கட்கிழமை

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

குருபூஜை விழா

காலை 10 மணி முதல்

ஸ்ரீ சொக்கலிங்கப்பெருமானை வழிபடுதல்

*

விழா மலர்

திருக்கயிலாய யாத்திரை

17—5—60 செவ்வாய்க்கிழமை

காலை 9 மணி

ஆனந்தபரவசர் திருநாள்

தருமையாதீனப் புலவர்,
வித்துவான், திரு. வை. குஞ்சிதபாதம் பிள்ளை,
தலைமைத் தமிழாசிரியர், நகராளும் கழக உயர்பள்ளி,
நுங்கம்பாக்கம், சென்னை,

"பண்டார சாத்திரம்"

வித்துவான், திரு. வி. சா. குருசாமி தேசிகர்,
தமிழ்ப்பேராசிரியர், தருமையாதீனப் பல்கலைக்கல்லூரி,

"ஆனந்த பரவசம்"

வித்துவான், திரு. மு. இரத்தின தேசிகர்,
தலைமைத் தமிழாசிரியர், கழக உயர்நிலைப்பள்ளி, திருவாரூர்.

"இளைஞர்கள் வாழ்வில் சமயம்"

திரு. T. புருஷோத்தமன்,
சென்னை.

"சமய நிலையங்கள்"

ஸ்ரீமத். சபாபதித் தம்பிரான் சுவாமிகள்,
மாயூரம் குமரக்கட்டளை விசாரணை.

"குருபக்தி"

மாலை 4-30 மணி

திருவண்ணாமலை ஆதீனப்புலவர், திருமுறைக் கலைஞர்,
வித்துவான், திரு. பட்டுச்சாமி ஓதுவார்,
தமிழாசிரியர், பொன்னையா உயர்நிலைப்பள்ளி, திருச்சி.
"தருமையாதீன அடியவர்கள்"

வித்துவான், திரு. மு. நடராச தேசிகர்,
திருவிடைமருதூர்.
"திருமுறைப்பயன்"

வித்துவான், சிரோமணி, திரு. வி. சபேசன்,
தமிழ்ப்பேராசிரியர், தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி.
"மெய்யுணர்வு"

மாலை 6 மணிக்கு

இசையரங்கு

தருமை ஆதீன இசைப் புலவர்,
எட்டையபுரம் சமஸ்தான வித்துவான், இசையரசு, தேவாரமணி,
சங்கீத சாஹித்ய சிரோமணி,
அண்ணாமலைப் பல்கலைக் கழகத்து இசைக்கல்லூரி முதல்வர்,
திரு. M. M. தண்டபாணி தேசிகர் குழுவினர்

17—5—60 செவ்வாய்க்கிழமை

காலை 11 மணி முதல்

ஸ்ரீ சொக்கலிங்கப்பெருமானை
வழிபடுதல்

*

பகல் 12 மணி முதல்

மாகேசுவரபூஜை

இரவு: பட்டணப்பிரவேசம்

உ
குருபாதம்
வாழ்க உலகெலாம்

ஞானசம்பந்தம்

[தருமபுர ஆதீனத் திங்கள் வெளியீடு]

மலர் 19 | சார்வரி - சித்திரை 10—5—60 | இதழ் 6

உ

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

சிவ ஞான போதம்

[கட்டுரை 16]

(மலர் 19, இதழ் 5, பக்கம் 257 இன் தொடர்பு)

வினா :- இருவினையும் சடம், சடம் தானே தொழிற்பட மாட்டாது. அதனால் உயிர்களை(ச் சடமாம்) வினை தானே சென்று அணையமாட்டாது. உயிர்கள் சேதனப்பொருள்கள் ஆதலின் அவ் வுயிர்களே அவ்வினைப்பயனை அறிந்து எடுத்துக்கொண்டு நுகரும். வினையை வினை முதலுக்குக் கூட்டி நுகர்விக்க (முன்னைய வெண்பாவிற் குறித்த சிவ பிரானாகிய) ‘வள்ளல்’ எதற்கு?

விடை :- காந்தம் இரும்பை வலித்துக் கொள்ளும் ஆயினும், காந்தமும் தானே வலித்துக் கொள்ளமாட்டாது. இரும்பும் தானே தன்னைக் காந்தம் வலித்துக்கொள்ளக் கொடாது இரும்பிற்கும் காந்தத்திற்கும் வேருய் ஒருவன் அவ்விரண்டனையும் நேரொக்கப்பிடித்து நிற்றல் வேண்டும். அங்கனம் நேர் ஒக்கப் பிடித்தவழிக் காந்தம் இரும்பினை வலித்துக் கொள்ளும். அதுபோல, உயிர்கள் வினையைச் செய்வதற்கு நிலைக்களமான உடம்பினுட் பொருந்தி அவ் வினைகளின் பலனை நுகரும் ஆயினும், உயிர்களும் தாமே தத்தம் வினைப்பயனை அறிந்து நுகாமாட்டா. வினைப்பயனும் தன்தன் வினை முதலாகிய உயிரை அறிந்து நுகரப்பட மாட்டாது. அவ்வினைப் பயனைப் பிறழ்ச்சியுருமல் அவ்வவ்வுயிரை நுகர்விக்கும் பொருள் ஒன்று அவ்வுயிரினும் வினைப்பயனினும்வேருய் உண்டு. அப்பொருளே வினை(களைச் செய்யும்) முதலாகிய உயிர்கள் அவற்றைச் செய்தற்கு நிலைக்களமான உடம்பின்கட் பொருந்தி, அவ்வினைகளின் பயனை நுகரச் செய்யும். அவ்வாறு நுகரச் செய்யாதாயின், வேறே எப் பொருள்தான் அவற்றை அறிந்து கூட்டுவது (அறிவும் முதன்மையும் இன்றி மலத்தின் மறைப்பு+உண்டு கிடக்கும்) அக்கட்டு நிலையில்? ஒருபொருளும் இல்லை. கடவுளாகிய முதற்பொருளே அது செய்யவல்லது.

1. உயிர்களுக்குத் தமக்கென (சுதந்திர) அறிவில்லை, 2. வினைசடம். 3. மாயை 'தாரகம் ஆம் அத்தன் தாள் நிற்றல்' என முற்கூறப்பட்டது. அம் மூன்றும் அவ்வாருயிருத்தலின், முழு முதற்பொருளே உயிர்கட்கு அவற்றின் வினைகளது பயனை அறிந்து கூட்டும் என்று 'பாரிசேட அளவை' கூறுவாராய், 'பிரானின் நுகராரேல் ஆர்தாம் அறிந்தணைப்பார்' என்ருர். இப்பொருளை உணர்ந்து கொண்டால் இத் திருவெண்பாவை இனிது கற்றறியலாம்.

"[3] அவ்வினையைச் செய்வதனில் [2] அவ்வினைஞர் தாம் 'சென்றங்
கவ்வினையைக் [1] காந்த பசாசம்போல் — அவ்வினையைப்
பேராமல் ஊட்டும் பிரானின் [5] நுகராரேல்
ஆர்தாம் அறிந்தணைப்பார் ஆங்கு"

சொல்வகை :- 1. காந்தபசாசம்போல், அவ்வினையைப் பேராமல் ஊட்டும் பிரானின், 2. அவ் வினையூர் தாம், 3. அவ்வினையைச் செய்வதனில், 4. சென்று அங்கு அவ் வினையை, [5. நுகராரேல் ஆர்தாம் அறிந்து அணைப்பார் ஆங்கு ?) சிவஞான மாமுனிவர் எழுதியருளிய சிற்றுரை யாவது :- " ஒருவன் எடுத்து நேர் ஒக்கப் பிடித்த வழி இரும்பினை வலித்துக் கொள்ளும் காந்தம்போல, அவ்வினைப் பயன்களைப் பிறழாமல் நுகர்விக்கும் முதல்வனால், 2. அவ் வினைகளைச் செய்யும் ஆன்மாக்கள்தாம், 3. அவற்றைச் செய்தற்கு நிலைக்களம் ஆகிய உடம்பின்கண், 4. பொருந்தி அவற்றது பயனை (அநுபவிப்பர்). 5. (அவ்வாறு) அநுபவி யாராயின், (வேறே) எவர்தாம் (அவற்றை) அறிந்து கூட்டு வார் ? (ஆங்கு=) அறிவும் சுதந்திரமும் இன்றி மலத்தில் மறைப்புண்டு கிடக்கும் அப் பேத்த காலத்து ஒருவரும் இல்லை என்பதாம்" 'வினை' நான்கனுள் பின்னிரண்டும் ஆகுபெயராய் (வினைப்)பயனைக் குறித்தலும், 'அங்கு' என்றது அசையாதலும் அறிக. 'செய்தற்கு இடனாய உடம்பைச் செய்வது என்று உபசரித்தார். இது சொற் பொருட் பின்வருநிலை'. (மாபாடியம்)இதனை ஆற்றொழுக்குப் பொருள்கொளாக் கொண்டுரைத்தலும் அமையும்.

(தொடரும்)

EXTRACT FROM VISITORS' BOOK

Dharmapura Adhinam
Velur Sri Vaithianathaswami Devasthanam
Vaithiswarankoil

இன்று புண்ணியவசமாக இத்திருக்கோவிலைக் கண்டு வழிபடும் பெரும் பாக்கியம் மீண்டும் எனக்குக் கிட்டியது. நிர்வாகத் திறமையும் முறையும் மற்றவர்கள் பார்த்துப் பின்பற்றக் கூடியன. இந்தத் திறமை தர்மபுர ஆதீனத்திற்கே தனியாக ஏற்பட்டது. தம்பிரான் சுவாமிகளும் மற்றவர்களும் செய்த ஒத்தாசைக்கு எனது நன்றி.

(Sd.) N. S. RAMALINGAM, M. L. A.
Nedumbalam, Tanjore Dt.

4—8—59.

பழந்தமிழ் நூல்களில் உயிர் வகைகள்

வித்துவான், திரு. செ. வேங்கடராமச் செட்டியார் அவர்கள்
ஆராய்ச்சி விரிவுரையாளர், அண்ணுமலைப் பல்கலைக் கழகம்,
அண்ணுமலைநகர்.

(மலர் 19, இதழ் 5, பக்கம் 268 இன் தொடர்ச்சி)

10. ஈயல் மூதாய்

இது இந்திரகோபம் எனவும், தம்பலப் பூச்சி எனவும் வழங்கப்படுவதும் உண்டு. இது முல்லை நிலத்தில் கார் காலத்தில் மிகுதியாகக் காணப்படும் சேம்பட்டுப்போன்ற ஒரு வகை நிறத்தையுடைய ஒருவகைப் பூச்சி. இதன் அழகைப் புலவர்கள் பலவகையாகச் சுவைபடக் கூறியுள்ளார்கள். செந்நிறம் ஊட்டப் பெற்ற பஞ்சின் பிசிர் பரவியுள்ளது போன்ற வண்ணமுடைய ஈயல் மூதாய் குளிர்ந்த நிலத்தில் வரிசையாக ஊர்ந்து கோலஞ் செய்கின்றதாக மதுரை மருதன் இளநாகனுர் கூறுகின்ருர்.

"ஊட்டுறு பஞ்சிப் பிசிர் பரந்தன்ன
வண்ண மூதாய் தண்ணிலம் வரிப்ப". (அகநா. 283)

என்பது காண்க. இந்தச் சேவ்வரக்குப் போன்ற நிறத்தினை யுடைய இந்திரகோபம் தரையில் பரப்பி வைத்தாற்போன்று பலவாகச் சேர்ந்து பரவி நீர் ஒழுகும் கால்வாய்க்கருகில் செல்வதால் நீரிலும் அவற்றின் நிழல் தோன்ற ஒவ்வொன்றும் இவ்விரண்டாய் அழகுடன் காணப்படுகின்ற இரட்டைக் காட்சியைக் கண்ட இடைக்காடனுர் என்னும் இன்மொழிப்புலவர் தாம் கண்டு களித்த அக் காட்சியை நாமும் மனக் கண்ணுல் கண்டு களிக்குமாறு கூறிக்காட்டுகின்ருர்.

"அரக்கு நிறவுருவின் ஈயல் மூதாய்
பரப்பியவைபோல் பாஅய்ப் பலவுடன்
நீர்வார் மருங்கின ஈரணி திகழ" (அகநா. 139)

என்பது காண்க. ஒளிமிக்க சேந்நிறமுடைய இத் தம்பலப் பூச்சிகள், குளிர்ந்த சிவந்த நிறத்துடன் ஊர்ந்து செல்கின்றன;

கரிய காயாமலர்கள் தரையில் உதிர்ந்துகிடக்கின்றன. சிவந்த மூதாயும்கரிய காயாமலரும் கலந்து தோன்றுகின்ற காட்சி நீல மணியும் பவழமும்போல் காணப்படுவதால் நிலம் அழகு மிக்குத் தோன்றுகின்றதாம். இக் கற்பனை மிக்க கவினுர் காட்சியைக் காட்டுகின்றவரும் இடைக்காடனுரே ஆவர். முரண்பட்ட இரண்டு வண்ணங்கள் ஓரிடத்தில் கலந்து காட்சியளிப்பது அப் புலவரின் இத்தகைய அரிய கற்பனைக்குக் காரணமாகின்றது.

" மணிமிடை பவளம் போல அணிமிகக்
காயாஞ் செம்மல் தாஅப் பலவுடன்
ஈயல் மூதாய் ஈர்ம்புறம் வரிப்பப்
புலனணி கோண்ட காரேதிர் காலே " (அகநா. 304)

என்பது அவர் கற்பனை. இப்புலவரே இக்கண்கவர் காட்சியைப் பிறிதொரு வகையாகக் காட்டுகின்றார். குறுகியதாய் முதுகு உயர்ந்துள்ள இந்தச் சிவந்த மூதாய்கள் குறு குறு என ஓடு கின்றனவாம்; நீலமணியை நெருங்குகின்ற பவழத்தைப்போலக் காயாவின் அழகுமிக்க நீலநிறமுடைய பழம் பூவில் ஒளிந்து மறைகின்றனவாம்.

" குறு மோட்டு மூதாய் குறுகுறு ஓடி
மணிமண்டு பவழம் போலக் காயா
அணிமிகு செம்மல் ஒளிப்பன மறைய " (அகநா, 374)

என்பது காண்க. ஒக்கூர் மாசாத்தனுரும் இக் கோபங்கள் செந்நிலத்தில் கரிய காயாமலரோடு கலந்திருக்கும் காட்சியைக் கண்டு இவ்வாறே பவளமோடு மணி மிடைந்தது போன்றதாகக் கண்டு கூறுகின்றார்.

" அரக்கத் தன்ன சேந்நிலப் பேருவழி
காயாஞ் சேம்மல் தாஅய்ப் பலவுடன்
ஈயல் மூதாய் வரிப்பப் பவளமோடு
மணி மிடைந் தன்ன குன்றம் " (அககா, 14)

என்பது காண்க. (செம்மல் — பழம்பூ ; தாஅய் — பாவி)

இந்தச் செம்புற மூதாயின் அழகில் ஈடுபட்ட சீத்தலைச் சாத்தனுர் ஓரழகிய காட்சியை நம் கண்முன் நிறுத்துகின்றார். நீலமணியோ என மருளத்தக்க காயாவின் அழகிய மலர்களின்

இடையிடையே சிவந்த புறத்தையுடைய மூதாய் பரவியிருத்தலாலும் அவற்றேடு முல்லைக் கொடியினின்றும் கழன்று வீழ்ந்த நல்ல பல முல்லைப் பூக்கள் பரவி இருத்தலாலும் ஓவியம் வல்லபுலவன் பல வண்ணங்கள் கொண்டு தீட்டி வைத்த ஓவியச் செய்கை போன்று காணப்படுகின்றதாம் அச் செந்நிலம். அம்முல்லை நிலமாகிய செந்நிலம் ஓவியம் எழுதுதற்குரிய கிழியாக விளங்க, நீலமும் சிவப்பும் வெள்ளையும் ஆய பல வண்ணங்களைக் கொண்டு வரைந்த சிறந்த ஓவியக்காட்சி போலக் காயாமலரும் மூதாயும் முல்லை மலரும் விரவி அழகுடன் காணப்படுகின்றவாகக் கூறுவது எவ்வளவு சிறப்பாகவுள்ளது காண்மின் !

" மணிமருள் பூவை யணிமல ரிடையிடை
சேம்புற மூதாய் பரத்தலின் நன்பல
முல்லை வீகழல் தாஅய் வல்லோன்
செய்கை யன்ன செந்நிலப் புறவின் " (அகநா. 134)

என்பது காண்க. இந்த ஈயல் மூதாய்க்குப் பவழத்தை உவமை கூறுவது போலவே பவழத்திற்கு உவமையாக இம்மூதரிய மருதன் இளநாகனுர் கூறுகின்றுர். ஒரு சிறுவனுக்கு அணிகள் அணிகின்றபோழுது பவழத்தால் செய்து குற்றம் அற்று விளங்குகின்ற எருதின் வடிவமைந்த அணியையும் இடையில் கட்டித்தொங்க விடுகின்றுர்கள். அதை விளக்கும் புலவர்,

" பெய்புல மூதாய்ப் புகர்நிறத் துகிரின்
மையற விளங்கிய ஆனேற் றவிர்பூண் " (கலி 85)

என்று கூறியுள்ளமை காண்க. ஆனேறு சிவபிரானுடைய ஊர்தியும் கொடியுமாகிச் சிறப்புற்றது. ஆதலில் அதன் வடிவைப் பவழத்தால் அணியாகச் செய்து குழந்தைகட்குப் பாதுகாவலாக அணிவது பண்டைத் தமிழரின் பழக்கமாகும். (மூதாய்ப்புகர் நிறத்துகிர் மூதாய்போன்ற செந்நிறப் பவழம்). மதுரைக் கவுணியன் பூதனுர் கண்ணுக்கு இம்மூதாய் குருதி உருவினதாகக் காட்சி அளிக்கின்றது.

" குருதி யுருவின் ஒண்செம்மூதாய் " (அகநா. 74)

என்று கூறுகின்றுர். ' ஒண் செம் மூதாய் ' என்றது, அதன் உண்மைத் தன்மையை நன்கு விளக்குவது காண்க.

11. சிலம்பி

இது சிலந்தி எனவும் வழங்கப்படும். வாயில் உண்டாகின்ற நூலால் வலைபோல் பின்னி அதற்கிடையில் இது இருந்து கொண்டு அப்பரந்த கூட்டில் வந்து அகப்பட்டுக்கொள்ளும் உயிர்களை உண்ணும் இயல்பினது. பாலைவனத்தில் இலைகள் எல்லாம் உதிர்ந்து வாடிய வளைந்த கிளைகளில் வலை பின்னினாற் போன்று பல சிலம்பிக் கூடுகள் காணப்படுகின்றனவாம். வேயிலின் விளக்கத்தோடு அவை அசைகின்ற தோற்றம் ஆடை நேய்வோர் ஆய்கின்ற நூலாகிய பா விரிந்து அசைவதுபோலக் காணப்படுகின்றதாம். காவல் முல்லைப் பூதனார் என்னும் புலவர் இச்சிலம்பிக் கூட்டினை யூன்றி நோக்கி,

" இலை யொழித் துலறிய புன்தலை யுலவை
வலை வலந் தனைய வாகப் பலவுடன்
சிலம்பி சூழ்ந்த புலங்கேடு வைப்பின்
துகில் ஆய் செய்கைப் பாவிரிந் தன்ன
வேயிலவிர்பு நுடங்கும் வெவ் வெங்களரி "   (அகநா. 293)

என்று விளக்கம் தந்துள்ளார். உலர்ந்த மரக்கிளைகளில் சிலம்பிக்கூடு கட்டி இருப்பதற்கு வலையை உவமைகூறியவர் அக்கூடு அசையும் தோற்றத்திற்கு ஆடை நேய்வோர் நூல் ஆயும்போது நூலின்பா, தெருவில் விரிந்திருந்து அசைவதை உவமை கூறி நம்மை மகிழ்ச்சியில் ஆழ்த்துகின்றார்.

வீட்டிலும் இச்சிலம்பி கூடு கட்டுவதுண்டு. மதுரை மாநகரத்தில் வேனிற் காலத்தில் காற்றை வருவிப்பதற்குரிய ஆலவட்டம் கூதிர்க்காலத்திற்குத் தேவையின்மையால் அந்தச் சிவந்த நிறத்தையுடைய ஆலவட்டத்தை உறையில் இட்டுச் சுருக்கிச் சுவரில் உள்ள வளைந்த தறியில் தோங்கவிட்டிருக்கின்றார்கள். மக்கள் அதை அடிக்கடி எடுத்துப் பயன்படுத்தாமையால் கைத் தொழிலில் வல்ல கம்மியன் கவின்பெறப் புனைந்த அவ்வால வட்டத்தில் சிலம்பி தன் வாயில் தோன்றும் வெள்ளை நூலால் பின்னிக் கூடுகட்டிவிட்டதாம். அச்சிலம்பி பின்னிய கூட்டோடுதான் அவ்வாலவட்டம் தறியில் தூங்கிக் கொண்டிருந்ததாம். இந்நுண்ணிய உயிரின் செயலையும் நக்கீரர் கண்ணிற்கண்டு எண்ணி நமக்கு உரைக்கின்றார்.

கம்பராமாயணக் கலக்கமும் தெளிவும்

பெருஞ்சோற்கொண்டல், முத்தமிழ் வள்ளல்
புரிசை, திரு. சு. முருகேச முதலியார் அவர்கள்

(மலர் 19. இதழ் 5. பக்கம் 275 இன் தொடர்ச்சி)

தந்தையின் பெரும்பிரிவு கேட்டு வருந்தும் இராமன்

" எந்தாய் இகல்வேந்தர் ஏறே இறந்தனையோ
அந்தோ இனிவாய்மைக்கு ஆரே உளராவார் "

என அழுதலால், வாய்மையில் தசரதனுக்குள்ள பற்று நன்கு விளங்குகிறது. கங்கையில் குகன்கடத்திய நாவாயில் சென்ற செம்மல் பரதனை நோக்கிக் குகன் சுமத்திரையைச் சுட்டி இவர் யாரேன வினவிய பொழுது பரதன்,

" நெறிதிறம்பா மெய்யினைத்தான் நிற்பதாக்கி
இறந்தான்தன் இளந்தேவி "

என வகுதலால், தசரதச் செம்மல் நெறியையும் மெய்யையும் நிலையாக நிற்கச் செய்வதற்காகவே தான் நிற்காமல் வான் புகுந்தனன் என்பது விளங்குகிறது. மன்னவன் திருமேனியைச் சூழ்ந்து அகலாமல் துயருற்றுவைகும் அணியிழையாரைக் குறிக்கும் கம்பர்,

" உயிர்பிரிந்தும் புதல்வர் பிரிந்தும் கடையோட மெய்த்த வேந்தன்
திருவுடம்பை அகலாது அரறி விட்டிலரால் "

எனக்கூறுவதும், ஆகிய மிகப் பல இடங்களாலும் இக்கருத்து நன்கு வலியுறுத்தப்பேறுகின்றது.

தசரதர் உயிர் நீத்தது ஏன் ? என்ற வினுவிற்கு விடையும், கம்பராமாயணக் கலக்கமாக வரும் மலேவும், மனத்தைக் கலக்கித் தெளிவிக்கும் கம்பர் செம்பொருட் புதைவின் திறனும், மலைமேல் விளக்கேன மறைவின்றிக் காணும் இடத்திற்கு வந்து விட்டோம்.

பிள்ளைகலி தீர்க்கவந்த பெருமகன் இராமன் பிரிவால் பேரரசன் பேதுற்றுக் கலங்கி யழுதுக் கடுந்துயர் தாங்கானுய்த் தன்னுயிர் நீத்து விண்ணுலகுற்றனனெனச் சாங்கோபசாங்க மாய்ச் சாற்றக்கேட்டுச் சோகரசத்திற்கு ஏகமான இடம் இது எனத் தெளிவுருவாகவிருந்து வந்தவிடம், அருமை மகனுக்காக ஆண்மையே உருவான அப்பனிறந்தனனே அன்பே உருவான அன்னையிறக்காத காரணமென்ன என்றவுடனே தெளிவற்றுக் கலங்கிய இடமாகத் தென்பட்டது.

கொஞ்சம் பொறுப்போம்; நாமும் மலைத்துவிட்டோம். தந்தைக்குத் சலபோசன் சாபமிருந்தது, தாய்க்கு ஒன்றும் அப் படிச்சாபமில்லை. அதனுல்தான் தாய் நிற்கத் தந்தை நீங்கியது என்ற உணர்வெழுந்தவுடனே அக் கலக்கக்கடற்கோர் கரை கண்டதுபோல் தோன்றிற்று. ஓ அப்படியா? சாபத்தால்தான் மன்னவன் மாளநேர்ந்ததா? அச்சாபத்தின் வலி அவ்வளவு சிறந்ததா? அந்த முனி மனைவி என் கணவனும் போகின்ருன் யானும் போகின்றேன் மகன் பிரிவால் மரயும் உன்னுடன் உன் மனைவியும் மாய்க எனச் சாற்றியிருந்திருப்பளேல் அன்னை கௌசலையும் ஆருயிர் துறந்திருப்பளல்லவா? அப்படி சாபத் தால் மக்கள் பிரிவால் மாயவிருப்பின் மிக எளிய மக்களுந்தானே மாய்வார்கள்! பெருங்குடிச் செல்வர்களுக்கு இதில் என்ன பெற்றிமை? என்றவுடன் முன்பு வந்தச் சிறுவிளக்கமும் தொலைந்து பெருங்கலக்கமே காணுகிறது. அப்படியல்ல. மாவேந்தன் சோகமும் மாமுனியின் சாபமும் ஒன்றுபட்டுத்தான் மன்னவன் உயிர் நீத்தது. தண்ணீரையே உணவாகக்கொண்டு தசையின்றி யென்பெழுந்த மாமுனிவன் தவ உடம்பல்ல வாள் வேந்தன் பேராண்மைத் தனியுடம்பு. உயிர்நீப்ப உன்னினும் அதற்கு உறுபடையொன்று வேண்டும். அப்படையாகத் திகழ்ந் தது அருமுனிவன் சாபமொழி. அதை வரவேற்றுக் கொண்டது மன்னவன் சோக உளம். இங்கே ஊன்றி நிற்கிறது ஆன்ற அரசர்கோன் ஆண்மை வளம்.

காலத்தால் நிலையின்றிக் கடுஞ் செயலால் வலிபெற்ற அச் சாபத்திற்குக் காலவலியளித்துக் கடுக வருகென்றது மன்னன் கடமையுணர்வு. மாமுனிவன் பின் சென்று வல்லரக்கர் திறங் கொன்றுச் செவுடையான் வில்லிறுத்துத் திருமகளின் மணம்

முடித்துத் திரும்பியவன் இளமையிலேயே என் மகன். அவ் வாண்டகை பதினான்காண்டுகள் வனத்திடைவைகி எங்ஙனம் மீள்வனென இன்று அஞ்சுகின்றதில்லை என்றன் நெஞ்சம். அல்லது இளையவள் மொழிக்கிணங்கி என்னை இடர்க்கடலிலுய்த் தனனே என் தந்தையென மைந்தன் எண்ணுவனோ எனவும் என் மனம் மயங்கவில்லை. எனதுள்ளத்தை எம் நம்பி உணர்வன் அவன் உரத்தை யானும் நன்குணர்ந்துள்ளேன். மரபும் வாய்மையும், மன்னிய நன்னயக் குடியில் யான் ஏன் பிறந்தேன்? எங்கள் பண்பாட்டைப் புண்பாடாக்கிப் போக்கவா? ஒல்காத உணர்வுடையார் சொல்லாத இடருழந்து செல்லாது காத்த பொருள் இல்லாது போவதற்கோ?

வேண்டாம் வேண்டாம் எங்கள் தொல்லறங்கள் என் காலத்தில் தொலைவுற வேண்டாம்; யானே தொலைகின்றேன். என அறத்திற்கே உயிர் நீத்தான் அண்ணல் தசரதன். அந்நாள் தசரதன் வகுத்த அறநெறி நம் பாரதத்தில் இன்றும் பயில்கிறது, பிரார்த்தனைக்கு வருவார்பால் பிழையுள்ளோர் மறைந்துறினும் சோதிக்க வேண்டாம் எனச் சொல்லி உலகெலாம் வேம்பியழ உயிர்கொடுத்த உத்தமரில் உத்தமனைப் பெற்றெடுத்ததும் நம் பாரதமே. வாழ்க அறநெறி. வாழ்க அறத்தாண்மை வாழ்க கவிக்கம்பன் மலர்ந்த புகழெந்நாளும்.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapura Adhinam
Velur Sri Vaithianathaswami Devasthanam,
Vaithiswarankoil

I am very fortunate in having Dharsan of Goddess this evening. The temple is maintained in perfect order and kept very clean. I thank the authorities for all the fecilties that efforded to have Dharsan and Goddess.

(Sd.) S. RAMACHANDUR.

31—7—59. Asst. Engineer, (H. W.) Chidambaram.

அன்பும் இன்பமும்

செஞ்சோற்கோண்டல் - வித்துவான், திரு. சொ. சிங்காரவேலனுர்,
தமிழ்ப்பேராசிரியர், ஆதீனப் பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.

மணிவாசகம் :

அன்பு இறைவனை அடைவதற்கு நல்வழியாகும். இறைவனை அடைவதற்கு மட்டுமல்ல; இவ்வுலக வாழ்க்கைக்கும் அன்பே துணை. 'உயிர் உடம்போடு இயைந்த தோடர்பு அன்போடு இயைந்த வழக்கு' என்பர் திருவள்ளுவர். உயிர் நிலை அன்பின் வழியதே என்பது திருவள்ளுவர் உள்ளம். திருவாசகம் அன்பின் வடிவாய்த் திகழ்கிறது. திருவாசகத்தில் சோல்லேல்லாம் அன்பு; சோல்லின் உட்போருளேல்லாம் அன்பு. அந்த அன்பு ஆவியோடு ஆக்கை புரை புரைகனியப் புகுந்து நின்று மணிவாசகரை உருக்குகின்றது; பாடுகின்ருர் :-

" அன்பினால் அடியேன் ஆவியோடு ஆக்கை
ஆனந்தமாய்க் கசிந்து உருக
என்பரம் அல்லா இன்னருள் தந்தாய் யான்
இதற்கு இலன் ஓர் கைம்மாறு "

இது மட்டுமா? " அன்புடை அடிமைக்கு உகந்தானே " என்று போன்னம்பலத்தில் ஆடும் போற்புடையானை விளிக்கின்ருர். வார்த்தை வரம்பைக் கடந்த அவ்விழுமிய அன்பு அருள்இன்பத்தை அவர்க்கு அளித்தது. அவ்வின்பத்தின் மலர்ச்சியே திருவாசகம் என்று சுருங்கக் கூறலாம்.

குயிற்பத்தில் ஒரு காட்சி :

தலைமகன் அவளிடத்திலே வருவேன் எனக்கூறிய காலம் இளவேனில். நம்பினுள் அந்த நங்கை. வேனிலும் வந்து விட்டது; வேட்டவன் வரவில்லை. வேதனை மிகுந்து வேம்பினுள். மலர்ச்சோலைக்கு ஓடினுள். அங்கே அவள் காதலன் சிறைப் புறஞகவந்து நிற்கிருன். மனமகிழ்வு கோண்டாள். வார்த்தை பிறழானுய் வந்துவிட்ட தலைமகன் விரைந்து வரைந்துகோள்ள வேண்டும் என்பது அவள் உள்ளம். அதனை அவள் நேர் முகமாகச் சோல்வாளா? அப்படிச் சோல்வதுதான் நாகரிகமாகுமா? அவனுடைய பேராற்றலையும் பேருளையும் குரலமுது கூட்டிய குயிலுக்குக் கூறுவதுபோல் கூறுகிருள்.

"குயிலே! எனது மணாளன் கருணைநிரம்பியவன்; வானவர் வழிபட்டுக்கொண்டேயிருக்க அவர்களை ஆளாது மண்ணுலகத்து வந்து மனிதரை ஆட்கொள்ளும் வள்ளல்; என் மன உணர்வு பொறிகளினிடத்து ஓடாமல் தன்னிடத்தே ஓடுமாறு செய்து நெஞ்சுள் நெஞ்சாய் இருக்கும் நிமலன்; அவன் வருமாறு கூவுவாய்" என்கிருள் அவள்.

'தேன் பழச்சோலை பயிலும் சிறு குயிலே' என்று விளித்தாள். தேனொழுகும் மாங்கனி சோலையிலே இருக்கிறது; அதனைக் கோதி உண்ண அறியாது வாளா கூவிக்கொண்டு இருக்கும் நீ அறியாமையாகிய சிறுமையை உடையை என்பவளாய் "சிறுகுயிலே" என்ருள். தன் காதலனை இன்னுன் என்று அறிமுகப்படுத்தும்போது 'வான் பழித்து இம் மண் புகுந்து மனிதரை ஆட்கொண்ட வள்ளல்' என்ருள். 'ஊன் பழித்து உள்ளம் புகுந்து என் உணர்வு அது ஆய ஒருத்தன்' என்று உரைத்தாள். மணிவாசகர் தலைவியின் கூற்ருகக்குயிற் பத்தில்ஒரு பாடலில் குறிக்கும் நயப்பாடு இது. இவ்விடத்து இறைவன் - வான் பழித்து மண்புகுந்த வள்ளல் உள்ளம் புகுந்து உணர்வு மயமாகிய இன்ப அநுபவத்தை எடுத்து அருளியுள்ளார்.

அநுபவ விளக்கம் :

இறைவன் அளித்தது - அளிப்பது அருள் இன்பமே என்பதனை,

> " பேரருள் இன்பம் அளித்த பெருந்துறை
> மேய பிரானே "

என்று அருளியுள்ளார். அது மட்டுமா? அத்தன் கருணை சித்தம் சிவமாக்கும்; செய்தனவே தவமாக்கும் என்பதும் அடிகள் அனுபவம். அவ்வின்பம் - அழுது அழுது ஆற்றும் தூய அன்பினுல் விளைந்த இன்பம் நினைக்க நினைக்க மணி வாசகருக்கு இனிக்கிறது; அதன் சுவையை எப்படி உரைப்பது என்று தயங்குகிறது அவ்வருள் மனம். நெல்லிக்கனி, தேன், பால், நிறை இன் அமுது, அமுதின் சுவை, என்று பலவகையாலும் அதனைச் சொல்லினும் அமைதி கண்டாரில்லை அடிகள். அவ்வின்பப்பேற்றில் எக்களித்த கவிப்பேருக்கு அநுபோக இலக்கணம் என்ற தலைப்பில் கோயில் திருப்பதிகமாய் வெளிப்படுகிறது.

'இன்றே கண்ணுல் கண்டு களிப்பேன்'
'ஆனந்த மாக்கும் என் சோதி அயலும் உறவும் இனி எனக்கில்லை'
'குறுகினேற்கு இனி என்ன குறை'
'என் உடலிடம் கொண்டாய் யான் இலன் இதற்கு ஓர் கைம்மாறே'

என்ற பகுதிகள் இவ்வனுபவ விளக்கங்கள் ஆகும்.

ஆனந்தக்கடல் :

மணிவாசகர் திருவுள்ளத்தில் அன்புவலைப்பட்ட அமுத வடிவாம் இறைவன் குறைவிலா நிறைவாய் - கோதிலா அமுதாய் - கொழுஞ்சுடர்க் குன்ருய் வெளிப்பட்டனன். வஞ்சனை செய்யும் புலன் ஐந்தின் வழி அடைபட்டது. அமுது ஊறி நின்றது. ஓர் ஒளிப் பரப்பு உலகம் அண்டம் அனைத்துமாய் முளைத்தெழுந்தது. அந்தம் ஒன்று இல்லா ஆனந்தம் விளைந்தது; பாடுகின்ருர் :-

"இன்றெனக்கு அருளி இருள் கடிந்து அருளி என்
உள்ளத்து எழுகின்ற ஞாயிறே போன்று
நின்ற நின் தன்மை நினைப்பு அற நினைந்தேன்"

'சோதியாய்த் தோன்றும் உருவமே அருவாம் ஒருவனே
சொல்லுதற்கு அரிய
ஆதியே நடுவே அந்தமே பந்தம் அறுக்கும் ஆனந்தமா கடலே'

'வாழ் முதல்' சிந்தனை :

இந்த அருள் வாழ்வு அடிகளார்க்கு வாய்த்தது இறை அருளால். அவ் இறைஅருளே தனித்துணை; மனத்துணை. தம் வாழ்க்கைக்கு முதற்பொருள் இறைவனே என்று அடிகள் உணர்கின்ருர்; உணர்த்துகின்ருர். வாழ் முதல் என்பது அவரது அரிய சொல்லாட்சி ஆகும்.

"போற்றி என் வாழ்முதல் ஆகிய பொருளே"
"மனத்துணையே என்றன் வாழ்முதலே எனக்கு எய்ப்பில்
வைப்பே"

எனும் ஈரிடங்களில் பொருளாழம் மிக்க இச்சொற்ருெடரை வழங்கி உள்ளது அடிகள் அருள் வாக்கு. வாழ்விற்கு முதல் அன்பே; அருள் உருவாகிய இறைமையே, என்பது வாழ் முதல் என்ற தொடர் நமக்குத் தரும் விழுமிய கருத்தாகும்.

பதினொராந் திருமுறையில் :

கயிலை பாதி, காளத்தி பாதி அந்தாதியில் - நக்கீரர் திரு வாக்கில் - வாழ்முதல் என்று இறைவனைக் குறிக்கும் திறமும் இங்கே கருதுக :

" வைத்த இருநிதியே என்னுடைய வாழ்முதலே
நித்திலமே காளத்தி நீள் சுடரே — மொய்த்தொளிசேர்
அக்காலத் தாசை அடிநாயேன் காணுங்கால்
எக்காலத் தேப்பிறவி யான் " (54)

பரணரது சிவபெருமான் திருவந்தாதியிலும் இவ்வரியதொடர் காட்சி தருவது கருத்துக்கு விருந்தாகும்.

" ஏறேய வாழ்முதலே ஏகம்பா எம்பெருமான்
ஏறேறி யூரும் எரியாடி — ஏறேய
ஆதி விடங்கா காறை அண்டத்தாய் அம்மானே
ஆதிவிடங்கா வுமைநன் மாட்டு " (57)

இவ்விரு பனுவல்களும் பதினொராந் திருமுறையைச் சார்ந்தவை.

உலகியலில் வாழ்வின் முதல் எதுவென்று பலர்க்குப் புரிவதில்லை. செம்மையான சிந்தை பண்படுத்தப்பட்ட வயல் போல. அதுவே அறம் தழுவிய சிந்தை. மனத்துக்கண் மாசு இலன் ஆதலே அறம் அல்லவா? அதுவே இறை தங்கும் கோயிலாம். அப்போதுதான் ஒருவன் மற்றொருவனைக் கெடுக்கும் தீத்திறங்கள் மடியும்; தெளிவும் அமைதியும் சேரும். வாழ்வின் முதற் பொருளாகிய இறைமை மலரும்; அருளின்பம் புலப்படும். அதற்கு அடிப்படை அன்பு என்பதை மறத்த லாகாது.

" இன்பமே என்னுடை அன்பே "

என்ற மணிமொழியும்,

" முன்பு செய் தவத்தின்
முடிவிலா இன்பமான
அன்பினை எடுத்துக்காட்ட "

என்ற சேக்கிழார் செம்மொழியும் வாழ்முதலைக் காண்பதற்கும், அன்பும் இன்பமும் குறித்துச் சிந்திப்பதற்கும் நமக்கு நற்றுணை புரிவனவாம்.

உடல் வளர்க்கும் மூலிகைகள்

திரு. V. பலராமையா B., A., B. L., அவர்கள்,
District Magistrate, Cuddalore.

(மலர் 18, இதழ் 11, பக்கம் 758 இன் தொடர்ச்சி)

பிருங்காமலக தைலம்

கரிசாலை இடித்துப் பிழிந்த சுரசம் படி ½
நெல்லிக்காய் சுரசம் படி ½
எள்ளெண்ணை படி 1
பசும்பால் படி 1

இவைகளை ஒன்று சேர்த்துப் பாத்திரத்திலிட்டுக்காய்ச்சி நெய் காய்ச்சும் பக்குவத்தில் இறக்கவும். இறக்கும் சமயத்தில் மருந்துக் கடையில் கிடைக்கும் வாசனைத்திரவியம் 4 அணுவிற்கு வாங்கித் தூள் செய்து தைலத்திலிட்டு இறக்கி ஆறிய பிறகு வடித்துக்கொள்ளவும். இத்தைலத்தை வாரத்திற்கிருமுறை தலைக்குத் தேய்த்து எண்ணை ஸ்நானம் செய்துவர கண்குளிரும், உடல் வெப்பம் தணியும், பித்தம் நீங்கும், சடம் வலுக்கும்.

வல்லாரை 3

Eng: Hydrocotyle Asiatica. Tel: Saraswathi, Manduka. Sams: Brahmi. Mel: Kudakam.

இம்மூலிகை குளிர்ந்த மலைகளிலும் தண்ணீர் பாய்ந்து பாய்ந்து கொண்டிருக்கும் சமவெளிகளிலும் கிடைக்கும். குத்துக்குத்தாகவும் படர்ந்தும் இருக்கும். இதன் இலைகள் வட்டமாக இருக்கும். இதற்குக் கவனமூலியென்றும் உடலந் தேற்றியென்றும் கூறுவதுண்டு.

காயசித்தி மூலிகைகளில் இது ஒரு சிறந்த மூலிகை. இதை வேருடன் கொண்டுவந்து நம் தோட்டங்களில் உரமிட்டு நட்டுப் பயிர் செய்யலாம். எப்போழும் ஈரம் இருத்தல் அவசியம்.

இம்மூலிகை மூளையைப்பலப்படுத்தும். ஞாபகசக்தியை அபார மாய்ப் பெருக்கும். பயித்தியத்திற்குக் காலம்சென்ற டாக்டர் தைரியம் வல்லாரை உப்பை ஊசிகள் மூல்யமாய்க் கொடுத்து பலன் பெற்றுள்ளார். இந்த இலையையாவது உப்பையாவது கெர்ப்பிணிகளுக்குக் கொடுத்துவந்தால் பிறக்கும் குழந்தைக்கு ஞாபகசக்தியும் வாக்கு சுத்தமும் உண்டாகும். இதன் பலனை உத்தேசித்தே தெலுங்கில் இதை சரஸ்வதி செடி என்றும் சொல்லுகிறார்கள்.

" காக்கா இரண்டும் கருநீலகண்டரும்
வாக்குக்குரிய வல்லாரையும்
பாக்களவு தின்றால், ஆக்கைக்கு உயிர் ஆயிரம் "
(காக்கா - காக்கரட்டான், சங்கு புஷ்பம்)

என்பதினால் வாக்குக்கு வல்லாரை ஓர் அறிய மூலிகையாகிறது.

சிறு குழந்தையிலிருந்தே இம்மூலிகையைப் பல வருடங்கள் கொடுத்துவந்தால் 10 பக்கங்கள் படித்து உடனே திருப்பி ஒப்பிக்கும் ஞாபக சக்தி உண்டாகுமென்றால் இதன் பெருமையை யாதென்று சொல்வது. ஹிருதயத்தை (Heart) பலப்படுத்தும். நரைவராது, இதை ஐந்து வருடங்கள் பாலன்னம், பாசிப்பயிறு சாதம் காய்கறிகள் சேர்த்துப் பொங்கல் பழம் இவைகளை மாத்திரம் சாப்பிட்டு வல்லாரையும் சாப்பிட்டு வந்தால் நரை திரைமாறும். பத்தியமில்லாமல் சாப்பிடினும் நரை சாதாரண மாகச் சிறுவயதில் வராது. இம்மூலிகையை சித்தபிரமை (Hysteria) க்குக் கொடுத்து பூரண குணம் கண்டிருக்கிறேன்.

கவனிப்பு :- குஷ்டத்திற்கு (Leprosy) ஜெர்மானிய வைத்திய நிபுணர் ஒருவர் பலருக்குக் கொடுத்து பூரண குணத்தைக் கண்டுள்ளார். வல்லாரை சூரணத்தை புண் கண்ட குஷ்டங்களில் தூவி வைக்க புண்கள் ஆறும். அதிகாலையில் பச்சை ஜலத்தில் ஸ்நானம் செய்து பச்சை இலைகள் 20 மென்று சாப்பிட்டுவரின் க்ஷயம் (T. B.) குணமாகும். சாப்பிட்ட பிறகு 2 மணி நேரம் ஒன்றும் சாப்பிடக்கூடாது. க்ஷயத் துக்குக் காலையில் வல்லாரையும் மாலையில் $\frac{1}{4}$ பலம் துளசி இலையும் கொடுத்து க்ஷயம் குணமானது கண்ட அனுபவம்.

உபயோகிக்கும் முறை:

வல்லாரை இலைகளைக் காம்பு இல்லாமல் பறித்து காலையில் 10 முதல் 15 வரை இலைகள் சாப்பிடலாம். பச்சை இலைகள் கிடைக்காத இடங்களில் ஷே இலைகளை நிழலில் உலர்த்தி பசும்பால் ஆவியில் 10 நிமிடங்கள் வேகவைத்து நிழலில் உலர்த்தி சன்னமாய்ச் சூரணம் செய்து வைத்துக்கொண்டு இரண்டு மூன்று சிட்டிகைகள் தேனும் பசுநேய்யும் கூட்டியாவது, தேனில் மாத்திரமாவது சாப்பிடலாம். க்ஷயத்திற்கு (T. B.) பசு நேய்யில் கொடுப்பது நலம்.

வல்லாரை சுத்தி

பசும் பாலில் புட்டவியல் செய்து எடுத்து நிழலில் உலர்த்தவும்.

வல்லாரை உப்பு

வல்லாரை சமூலம் (சமூலம் என்பது வேருடன் செடி பூராவும்) கொண்டுவந்து நீரில் சுத்தமாய் அலம்பி நிழலில் உலர்த்தி நெருப்புவைத்து சுட்டு சாம்பலாக்கி ஒருபடி சாம்பலுக்கு நான்குபடி ஜலம் விட்டுக் கரைத்து. தெளிவு மாத்திரம் வடித்து ஈயமிருக்கும் பாத்திரத்தில் விட்டுக் காய்ச்சினுல் நீர் இறுகி கீழே வெண்மையான உப்பு வரும்.

இந்த உப்பை ஒரு மிளகளவு ஒரு கோப்பை வெந்நீரில் கலக்கி உட்கொள்ளவும். மேற் சொன்ன பலன்கள் எல்லாம் அடையலாம்.

Note:- Brain tonic, Heart tonic, Removes all diseases from the body and rejuvenates it.

(தொடரும்)

துன்பம் எது ?

திருச்சிற்றம்பலத்தான்

" வானந் துளங்கிலேன் மண்கம்ப மாகிலேன் மால்வரையும்
தானந் துளங்கித் தலைதடு மாறிலேன் தண்கடலும்
மீனம் படிலேன் விரிசுடர் வீழிலேன் வேலைநஞ்சுண்
டுனமொன் றில்லா வொருவனுக் காட்பட்ட வுத்தமர்க்கே "
— அப்பர்.

" சுவாமி ! சுவாமி ! "

அடியார்களின் பரபரப்பும் பதட்டமும் குருமூர்த்திகளது ஞான அமைதியைக் கலைக்க முடியவில்லை. அடியார்கள் மீண்டும் மனங் கசிந்து அழைத்தார்கள்.

" சுவாமி ! நடக்கக்கூடாதது நடக்கத் தொடங்குகிறது ; செய்யத்தகாத செயல் செய்யப்படுகிறது ...... " பணிவோடு விண்ணப்பிக்கும் முறையிலும் முன்னைய பரபரப்பு மீண்டும் அதிகமாகியது,

" அன்புடையோரே ! ஏன் இந்தப்பரபரப்பு ? என்ன இப்போது நடந்தது ? செய்தியைக் கூறுங்கள் ? என்று திருவாய் மலர்ந்தருளினார்கள் குருமூர்த்திகள்.

" சுவாமி ! காவிரிக்கரைச் சாலைவழியே கடலாடச் சென்ற தஞ்சையரசன் செவியில் நம் ஞானபுரீசுவரர் கோயில் அர்த்த சாமவேளைப் பூசை மணி ஓசை விழுந்ததாம். மனத்தினால் வணங்கிப் பல்லக்கினின்றும் இறங்கி வழிபடும்போது, சூத்திர சமாதி ; வணங்குதல் தகாது என்று கூறி வணங்கிய குற்றத் திற்குக் கழுவாய் தேட வேண்டுமென உரைத்து மற்றையவர் இக்குற்றத்திற்குள்ளாகாதபடி இக்கோயிலை இடித்துவிட வேண்டும் என்றனராம் சிலர். ஏவலாளரை ஏவிவிட்டு மன்னன் சென்று விட்டான். ஏவலாளர்கள் ஆலயத்தை இடிக்கத் தொடங்கி விட்டார்கள்...... சுவாமி ! என்ன செய்வதென்றே அடியேங்களுக்குப் புலப்பட வில்லை... சந்நிதானத்தில் விண்ணப்பித்துக் கொள்ளவே ஓடோடியும் வந்தோம் " என்று வேண்டி நின்றார்கள் சீடர்கள்.

திருவம்பல தேசிக பரமாசாரிய சுவாமிகள் - ஆம் ; தருமையாதீனத்தின் ஏழாம் பட்டத்து இலங்கிய அக் குருநாதர்

புன்னகை செய்தார்கள். அடியார்களின் பரபரப்பு அவர்களை ஒரு மாற்றமும் அடையச் செய்யவில்லை. அடியார்களைக் கருணையொழுகப் பார்த்தனர். அந்தக் கருணைவிழிகளின் பேரொளி தாங்காது தலை தாழ்த்தி நின்றனர் சீடர்கள் ; அவர்களின் கண்களில் கண்ணீர்த் துளிகள் அரும்பின.

சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளத் தொடங்கினுர்கள் ; " அடியார்களே ! நம் செயல், நம் நினைப்பு, நம் வாக்கு என்பது எல்லாம் வீண் அல்லவா ? நமக்கேது அந்த ஆற்றல் ? உங்கள் பரபரப்பு ஏன் ? " பரபரக்க வேண்டாம் பலகாலும் சொன்னேன் வரவரக் கண்டாராய் மனமே " என்பதன்றோ நம் சிந்தையில் இருத்தல் வேண்டும் ? நம் இறைவன் ஆலமுண்ட நீலகண்டன் அல்லனோ ? அவனைக் கொண்ட நமக்கு அச்சமும் உண்டோ ? அச்சமும் வரலாமோ ? நம் ஈசன் பலகீனனோ ? அவன் பலகீனனுயின் நம் ஆலயத்துக்கு மோசம் வந்ததென்று நாம் மொழியலாம். ஆக்குவோனும் அவனே ; இன்று அழிப்போனும் அவனே. அப்படியாயின் நாம் பிறரை நொந்து நோக்குவது எது கருதி ? வருவது காலத்தில் வந்தே தீரும், அப்படி வருவதும் அவனருள் வழி நிற்கும். நம்மை என்ன செய்து விடும் ? அவன் வேண்டத் தக்கது அறிவோன் ; வேண்ட முழுதும் தருவோன்; ஞானநெறி நிற்கும் நமக்கு அவ்வீசன் கழலே புகல்; கவலை ஒழிவீர்களாக ! "

அமைதியுடன் ஆறுதல் மொழிகளாக உதிர்ந்தன இவை. அடியார்கள் தலை வணங்கினுர்கள்.

குருமூர்த்திகள் கண்மூடிக் கரங்குவித்துத் தியானித்து நின்ருர்கள். அவர்கள் இதயத்திலே எம்பிரான் திருவடிச் சிலம்பொலி கேட்டது ; குருநாதர் உளம் கரைந்தது, பெருமான் திருவருட் கருணை கண்டு நெகிழ்ந்தது ;

" தேசத்துக்கும் சிவனுறையும் திருக்கோயில்களுக்கும் மோசம் வந்தது. முதல்வனே ! நான் யாரை வெறுப்பேன் ? நாட்டு மன்னனை - அரசியலை வெறுப்பேனோ ? வினைப்பயனுகக் கொண்டு செலுத்துகின்ற உன்னை வெறுப்பேனோ ? நீயே சொல், நீ எல்லாம் அறிந்தவன் அன்றோ ? உன்னையன்றி எமக்கார் துணை ? "

திருவைந்தெழுத்துத் தியானம் நிகழ்ந்தது........ அங்கே ஞானபுரீசுவரர் திருக்கோயிலில்......

2

திருக்கோயிலை இடிக்கத் தொடங்கிய ஏவலர் நிலை இரங்கத் தக்கது. இருப்புக்கோல் படும் இடந்தோறும் இரத்தம் பெருக் கெடுத்தது. ஏவலர் மயங்கி விழுந்தனர். ஆம், இறைவன் திருமேனியை ஒன்றுக்கும் பற்ருத மானிடப்புழு தீண்டித் தீமை புரிவதா ? அறக் கடவுளின் முறை மாறுமா ?

நகரெல்லையைக் கடந்து சென்ற அரசனுக்கோ கண் ஒளி மழுங்கியது. அரசன் பிழை உணர்ந்தான். திருக்கோவிலை இடிக்க வேண்டுமெனக் கூறியோர் ஊமையராய் நின்ருர்கள். அரசன் ஓடோடி வந்தான். தருமையுட் புகுந்தான். ஏவலர் நிலையையும் அறிந்தான். குருமூர்த்திகளின் திருமுன் வந்து விழுந்து வணங்கினுன்.

திருவுளம் நெகிழ்ந்த குருநாதரோடு திருக்கோயில் சென்ருன் மன்னன். திருந்திய உளத்தோடு வாடிய மன்னனுக்கு குருஞானசம்பந்தப் பெருமான் திருவருளால் ஒரு கண் ஒளி மீண்டது. குருநாதர் திருநீற்றைத் தெளித்தார்கள். உதிரம் நின்றது. எல்லோரும் குருநாதர் - திருவம்பல தேசிக பரமா சாரிய சுவாமிகளை - தருமையாதீனத்தின் ஏழாம் பட்டத்துப் பெருங்குரவரை வழிபட்டுத் திருவருள் விளக்கத்தை உணர்ந்து வியந்து போற்றி நின்ருர்கள்.

3

பூம்புகாரில் கடலாடித் திரும்பிய தஞ்சையரசன் தருமையின் தென் கிழக்கில் தங்கியிருந்து தருமை வந்து வழிபட்டான். அவன் தங்கியிருந்த இடமே இக்காலத்து மன்னன்பந்தல் என வழங்கப்படுகிறது. ‘ சூத்திரர்களுக்குத் துறவு ’ இல்லை என்று சிலர் கூறும் செய்தியைக் குருநாதரிடம் தெரிவித்து விளக்கம் வேண்டினுன் வேந்தன். “ வருணுசிரம சந்திரிகை ” என்ற நூலால் மன்னனது ஐயத்தை நீக்கித் துறவு நிலை அவர்க்கும் உண்டு என நிறுவினுர்கள் சுவாமிகள். நாள்தோறும் வழிபட்டு மறுகண் ஒளியும் பெற்ருன் மன்னன். உணர்விழந்தவர்கள் ஊமைத் தன்மை நீங்கிப் பிழை உணர்ந்தார்கள். நிவந்தங்கள் பலவற்றையும், அளித்துத் தஞ்சை மீண்டான் மன்னன்.

4

“ எல்லாம் சிவன் செயல் என்று எண் ” - என்பது தருமை யாதீன முதற்குருமுதல்வர் ஆகிய ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த

பரமாசாரிய சுவாமிகளின் திருவாக்கு. அன்று தொடங்கி இன்றும் அதே குறிக்கோளோடு இத்திருமடம் இயங்கி வருகிறது.

திருவம்பல தேசிகர் அவ்வாறு அடியார்களுக்கு ஆறுதல் கூறியருளிய பாடல் அடியில் வருவதாகும் :

"ஈசன் பலகீனன் என்றக்கால் ஆலயத்தின்
மோசம் வந்ததென்று மொழியலாம் — ஈசனே
ஆக்குவதும் ஆக்கி யழிப்பதுவுந் தானானல்
நோக்குவதேன் யாம் பிறரை நொந்து"

கூத்தோலி கேட்டவுடன் குருநாதர் பெருமான் திருமுன் திருவருளை வியந்து பாடிய பாடல் அடியில் வருகிறது :

"தேசம் சிவாலயங்கள் சேர அலையவொரு
மோசம் வந்ததையோ முதல்வனே — தேசத்து
மன்னை வெறுப்பேனே வருவினையை ஊட்டுவிக்கும்
உன்னை வெறுப்பேனே உரை"

மெய்யடியார்களுக்கு நன்மையே விளையும், தீமை வந்தாலும் திருவருளால் விலகிப்போகும் என்பதற்கு உலக வரலாற்றில் எவ்வளவோ சான்றுகள் உள்ளன. அவற்றுள் ஒன்ருக விளங்குகிறது தருமையாதீனத்தே ஏழாவது குருமூர்த்திகளாக விளங்கிய ஸ்ரீலஸ்ரீ திருவம்பல தேசிக மூர்த்திகள் அருள்வாழ்வு. 'தன் கடன் அடியேனையும் தாங்குதல்' என்று கடமையை அவன்பாற் போட்டு வாழ்தலே நன்று. ஏனெனில் சிற்றறிவும் சிறு தொழிலும் உடைய உயிர் திருவருள் வழி இயங்குவது. தன் நினைப்பில், செயலில், வாக்கில் நம்பிக்கைகொண்டு உயிர் ஆற்றும் ஒவ்வொரு நிகழ்ச்சியும் நிச்சயம் நிலைக்காது.

திருவருட் செயலாக, திருவருள் நினைப்பாக, திருவருள் மொழியாக இருக்க வேண்டும்.

உலக இயக்கத்தில் நன்றும் தீதும் மாறி மாறி வருகின்றன. அவையும் திருவருள் நெறியில் வருகின்றன; தாமே போகின்றன ஆகவே அவை வருங்கால் அவற்றுக்காக மனமகிழ்வதோ கலங்குவதோ சான்றோர்பால் இல்லை. 'இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான் துன்பம் உறுதல் இலன்' என்ருர் திருவள்ளுவர். 'இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை'- என்றது அப்பர் அருண்மொழி. இது மனத்தகத்தே நிறுத்திக்கொள்ள வேண்டிய ஓர் இனிய தத்துவமாகும்.

*போற்றியுரை

1. குருவருளும் திருவருளும் ஒன்றாக் கூடி
குணக்குன்றின் ஏறிநிற்கும் கோலமாகி
பொருவிலருள் தருகயிலை மணியைக் கண்டு
போற்றுதலால் புனிதமுளேன் புன்மை யேனும்
அருவமெனக் கதறிடுவார் தம்மின் நீங்கி
அரும்சைவ நெறி நிற்கும் அதனாலன்றோ
அருவுருவ நிலையிதுதான் என்பதாங்கே அறிந்து
தொண்டருடன் மகிழ்ந்தேன் அருளும் பெற்றேன்.

2. அருவமெனப் பிஞ்சுவெம்பிப் பழுத்தாற்போல
அறியாமையாற் பேசு மவர்கட் கெல்லாம்
குருவடிவாய்ச் சிவநெறியுட் கொள்ளு மாறு
கூறுகின்ற கயிலைமணி கோலங் கண்டேன்
பருவமறிந் தவரவர்தம் படிகள் காட்டிப்
பண்ணிசையால் அமைதமிழில் பரவிவாழ்த்த
உருவமைத்த கோலங்கள் போற்றச் சொல்லும்
உயர் சொற்கள் அகலாது ஒளியே காட்டும்.

3. புன்மை நெறிதனின் உழலும் போக்கினேனைப்
பொதுநீக்கித் தமைப்பணியப் புரிந்து நாளும்
வன்மை பெறும் வினை தடிந்தாள் சாந்தலிங்கர்
மலரடியைப் போற்றும் ஒரு வாய்ப்பால் என்றும்
நன்மைபல அருள் கயிலை மணியாய் மேலோர்
நவில் சுப்பிரமணிய குருநற்றாள் போற்றி
இன்மை என்பதொன்றன்றி அனைத்தும் பெற்றேன்
எழிலாரும் அருள் வாழ்வுக் குரியனானேன்.

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களைப் போற்றிப் பாடிய போற்றியுரை.

4. அன்புருவாய் அருள்கயிலைக் குருமணிக்கு
அடியேங்கள் வணக்கமவண் வந்தகாலை
இன்புறச் செய் திருக்கோயில் வழிபாட்டோடு
இயைந்த அருளாட்சி நிகழ் இடங்களேல்லாம்
முன்புதவு தொண்டர்களால் பேணுகின்ற
முறைமையினால் நாளுமுளத் தூய்மைபெற்று
துன்பகன்று குடந்தைவரை நடந்து சென்று
தொழுதுபின்னர் செந்தூர்வேள் துணைத்தாள் போற்றி.

5. அமைதியுடன் ஐந்துநாள் ஆங்கிருந்து
அருள்பேரை தனைச்சேர்ந்தோம் அருளால் ஆங்கே
எமை நோக்கியருளிய வா கேதாரத்தும்
இயல் கயிலை மலையிடத்தும் இறைஞ்சித் துன்பச்
சுமைநீங்கி வாழ்பேறும் எய்தும் என்றே
தொழும்பனேன் எண்ணியுள்ளேன் தூயதெல்லாம்
அமைஞானப் பெருங்கடலே மலையே சைவ
அரசோச்சும் குருமணியே வாழி வாழி.

இராமசாமி அடிகள்,
சாந்தலிங்க அடிகளார் கல்லூரி, பேரூர். கோவை.

கோள்ளேன் பிறர்பொருள் நின்னருள் நீங்கிக் குலவிடுமேல்
நள்ளேன் பிறர்நட்பு நின்னடியார் திருக் கூட்டமல்லால்
விள்ளேன் புறர்புகழ் நின்றன் புகழினை விள்ளலரேல்
உள்ளேன் பிறர்துணை உன்னையல் லாதெங்கள் உத்தமனே.

மன்னையோப் பாய்என தின்னுயிர் காத்திடும் மாட்சிமையால் [யால்
தன்னையோப் பாய் தனக் கின்னேன் றுவமையாய்த் தானின்மை
அன்னையோப் பாய்எனக் கத்தனேப் பாய்எனக் காவியோப்பாய்
என்னையோப் பாய்எனக் கின்னருள் செய்குரு மாமணியே.

அடிமை,
தா. ம. வெள்ளைவாரணம்,
தமிழ்ப்பேராசிரியர்,
செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்.

அம்மையார் மாட்சி

திரு. கீ. இராமலிங்கம் M. A., அவர்கள்
ஆட்சிமொழித்துறைத் தனி அலுவலர், சென்னை.

திருமுறை பன்னிரண்டனுள் திருக்கடைக்காப்புப் போன்று காணப்படுவது திருவருளால் அடியார் பெருமையைக் கூறும் திருத்தொண்டர் புராணமாகும். அதனைப் பெரிய புராணமென வழங்குகின்றனர். அதனைப் பாடியருளிய பெருமான் விழுமிய வேளாண் குலத்தில் தோன்றிய குன்றத்தூர் சேக்கிழாரடிகளாவார். அவர் அநபாய மன்னனிடத்து அமைச்சுப்பணி பூண்டு ஆட்சியினை மாட்சியுற நடத்தினர். இருமையும் பயக்கும் பெருமை இயல்பாக அமைந்த மெய்யடியார்களின் உண்மை வரலாற்றினைக் கேட்டின்புறுவதே நன்மையென அரசன் உளங்கொளுமாறு உரைத்துக் கேட்பித்தனர்.

அப்புராணத்துள் அறுபத்து மூன்று தனியடியார்களும் ஒன்பது தொகையடியார்களுமாகிய எழுபத்திருவரின் திரு வரலாறு ஓதப்படுகின்றது என்பர். இந்நாயன்மார்களைத் தனியடியார் அறுபத்து நால்வரெனவும், தொகையடியார் எண்மரெனவும் துணிந்து கூறுவதற்கு இடமுண்டு. "பொய்யடிமையில்லாத புலவர்" தனியடியாரைக் கூறும் திருப்பாட்டில் அமைந்திருப்பதால் அவர் தனியடியாராகவே இருத்தல் வேண்டுமென்பது வைப்பு முறைக்குப் பொருத்தமாகும். தொகையடியாரைக் கூறும் ஒரு தனிப்பாட்டு, "பத்தராய்" எனத்தொடங்கும் பாடலாகும். அதன்கண் உள்ளம், உரை, உடல் என்னும் முப்பொறியானும் தொண்டினைக் குறிக்க மூவரும், சீலம், நோன்பு, செறிவு, அறிவு என்னும் நான்கு நெறியினும் நாளும் பயிலும் செந்நெறிக் கேளிரைக் குறிக்க நால்வரும், ஆக எழுவர் காணப்படுகின்றனர். திருவாரூர் பெருமான் நம்பியாரூரருக்கு அடியெடுத்துக்கொடுத்த முதற் பாட்டின் முதலில் "தில்லை வாழ் அந்தணர்" என்னும் தொகையடியார் காணப்படுகின்றனர், அவரும் சேர்ந்து எண்மராவர். அதுபோல் தனியடியார்க் கூட்டத்துத் தொகையடியாரைச் சேர்த்திருத்தல், பொய்யடிமையில்லாத புலவர்க்குப் பொருந்தாதோ எனில்; பொருந்தாதென்க. என்னை? அவ்வடி இறைவனால்

அருளப்பட்டமையானும் தில்லை வாழ் அந்தணரென இடமும், பெயரும் ஓதப்பெற்றமையானும் அவர்கள் மூவாயிரவரென எண் வரையறைக்குட்பட்டமையானும் அவர்களும் வரையறைக்குட் பட்ட தனியடியார் போன்றே ஆவராதலின் என்க.

அறுபான் மும்மை நாயன்மாருள் பெண்கள் மூவராவர். அவர் முறையே காரைக்காலம்மையார், மங்கையர்க்கரசியார், இசைஞானியார் ஆவர். இம்மூவருள்ளும் சிவபெருமானைச் செந்தமிழ்த் திருப்பாட்டுப்பாடி வழிபட்டு உலகுக்கு வழி காட்டியவர் நம் காரைக்காலம்மையார் ஒருவரே ஆவர். அவர் இல்லறமும், துறவறமும் ஒருங்கு பூண்டொழுகிய அருந்திறலி னரும் ஆவர். அவ்வம்மையார் காரைக்கால் பதியில் தனதத்தர் என்னும் வணிகர்க்கு முன்னைத் தவப்பேற்றால் திருமகளெனச் சொல்லும்படித் திருவருளால் தோன்றியவர். அச்செட்டியாரும் செல்வ வளத்தோடு செந்நெறிச் செல்வமும் மிக்குடையவர். அத்தகைய சூழ்விலைல் அம்மையார் மிகுந்த பாராட்டுடன் இறை நினைவும் பிறைபோல் வளர வளர்ந்தனர்.

விளையாட்டுப் பருவங்களில் விளையாட்டுக்கு வேண்டிய இன்றியமையாத வரிப்பாட்டும் சிவபெருமான் திருப்புகழையே குறிப்பனவாக விளங்கும். அம்முறையில் தொண்டர்களைக் கண்டால் அம்மையார் தாமாகவே தொழுது, பணிந்து போற்றுவர். அம்மையார்க்கு மங்கைப் பருவமாகிய இல்இகவாப்பருவம் வாய்த்தது. அந்நிலையில் நாகப்பட்டினத்து நிதியதிச் செட்டியார் மகன் பரமதத்தச் செட்டியார்க்கு முதியோர் பலர் மணம்பேசி வந்தனர். மணம் இசைவு ஆனபின், காரைக்காலில் சிறப்பாகக் களிமகிழ் சுற்றம் போற்றக் கலியாணம் செய்தனர்.

தனதத்தச் செட்டியார் தமக்கு, அம்மையார் ஓரே மகளாய் இருந்தமையின் நாகபட்டினத்திற்குப் போகச்செய்ய ஒருப் பட்டிலர்; தமது வளமனைக்குப் பக்கத்தே ஒரு மாளிகை அமைத்து, மகட்கொடையும் அளவிறப்பக் கொடுத்து குடிபுகச் செய்து இல்லறத்தை நல்லறமாகச் செய்ய அமைத்தார். இருவரும் கருத்தொத்த காதலராய்க் கடவுள் நினைவோடு விருந்தும், ஈகையும் திருந்தப் புரிந்து வாழ்ந்து வந்தனர். சிறப்பாக அம்மையார் நம்பனடியார்க்கு வேண்டுவன அன்புடன் அளித்து வந்தனர்.

ஒருநாள் பரமதத்தச் செட்டியார்பால் குறைவேண்டி சிலர் வந்தார். அவர்கள் இரண்டு மாங்கனிகளைக் கையுறையாகக் கொடுத்தனர். அவர் அக்கனிகளைப்பெற்று, அவர் வேண்டும் குறைகளை முடிப்பித்தார்.

அக்கனிகள் இரண்டையும் வீட்டுக்குக் கொடுத்து அனுப்பினார். அம்மையார் கணவனால் கொடுக்கப்பட்ட அக்கனிகளை மிகச் சிறப்புடன் வாங்கித் தக்க இடத்தில் பேணி வைத்தார். அந்நிலையில் ஒரு முதிய அடியவர் மிகுந்தபசியுடன் அம்மையார் இல்லம் வந்தார். அவரைக்கண்டு பெரும் பரிவு கொண்ட அம்மையார் உடனே அவர் பசியைப் போக்க விரைந்தார். அப்பொழுது கறியமுது கைகூடவில்லை. திருவமுது கைகூடி இருந்தது. அம்மையார் அத்திருவமுதுடன் மாங்கனி ஒன்றையும் படைத்து அடியவரை உண்வித்தார். அடியாரும் உண்டு மகிழ்ந்து அரனை நினைந்து அம்மையை வாழ்த்திப்போயினர்.

நடுப்பகலில் கணவனார் வீட்டிற்கு வந்தனர். உண்ணுமுன் நீராடவேண்டுமென்னும் பண்பாட்டின்படி முழுகி, உணவருந்தினார். அம்மையார் உணவினை உகப்புடன் படைத்தார். உணவினுடன் இருந்த மாங்கனி ஒன்றையும் கொண்டுவந்து படைத்தார். அதனை உண்ட கணவன் அக்கனியின் சுவையில் ஈடுபட்டு மற்றுமொரு கனியையும் கொண்டுவரப் பணித்தான். அம்மையார் கணவனுக்கு ஊட்டுங்கால் தாய் நிலையை அடைகின்றார் ஆதலின் அவன் கேட்ட பழத்தைக் கொண்டுவருவார் போல் போயினார்

போனபின்னர் மாங்கனி முன்னமே அடியார்க்குப் படைத்த நினைவுவர ஆண்டவனிடத்தில் ஒரு பழந்தருமாறு வேண்டினார். ஆண்டவனும் அம்மையார்க்கிரங்கி ஒரு பழம் அருளினான். அதனைக் கொண்டுவந்து கணவன் உண்கலத்தில் படைத்தார். கணவன் உண்டான். அதனது மிகுந்த சுவையைக்கண்டு "இது முன் தந்த மாங்கனி அன்று. எங்கிருந்து பெற்றனை" என்று வினவினான். இது, "தென்னை தாளுண்ட நீரை, இன் சுவைத்தாகிய இளநீராய்த் தருதல் போலவும், புல்லும் நீரும் உண்ட ஆன், இன்சுவைத் தீம்பால் தருதல் போலவும் அடியார்க்கு நல்கிய பழத்தின் பெறுபேறாக ஆண்டவனால் நல்கப்படுவதாதலின் மிக்க சுவையுடைத்தாயிற்று" என்று சிந்தித்தார்.

(தொடரும்.)

இரண்டாம் இராசாதிராசனது : :
: : திருவொற்றியூர்க் கல்லெழுத்து

சிவநேறிச்செல்வர்,
வித்துவான், திரு. கே. எம். வேங்கடராமையா M. A., B. O. L.,
பிரின்ஸிபால், செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்.

(மலர் 19 இதழ் 5 பக்கம் 279 இன் தொடர்ச்சி)

இனி முதல் இராசேந்திரன் (1012 - 1044) காலத்திலும் சதுரானன பண்டிதர் என்று ஒருவர் இருந்தார், இவர் திருவொற்றியூர்த் திருமயானமும் மடமும் உடைய சதுரானன பண்டிதர் எனப் பெற்றார்.[1] முதலாம் இராசேந்திரனுடைய 31-ம் ஆட்சியாண்டில் உடையார் ஸ்ரீ இராசேந்திரதேவர் திருநாள், மார்கழித் திருவாதிரை நாளன்று[2], திருவொற்றியூரிறைவன் நெய்யாடியருளுவதற்கு 150 காசு இச்சதுரானன பண்டிதர் நிபந்தம் கொடுத்தார். $1\frac{1}{2}$ காசுக்கு ஒரு பசு வீதம் 100 பசுக்கள் வாங்கிப் பலமன்றாடிகளிடம்[3] கொடுக்கப்பெற்றன. ஆட்டாண்டுதோறும் பசுவொன்றினுக்கு அருமொழித் தேவன்[4] நாழியால் முந்நாழி நெய்யாக முந்நூறு நாழிநெய் மார்கழித் திருவாதிரை நாளில் தேவர் பண்டாரத்தே அளப்பதாக ஒப்புக்கொண்டனர். முதலாம் இராசேந்திர சோழன் காலத்தில் திருவொற்றியூர்த் திருக்கோயில் ஸ்ரீ விமானம் அருமையான கரிய கல்லினால் கட்டப்பெற்றது; அதனை ரவி என்னும் வரவீர சோழதக்ஷன் என்பவன் கட்டினான்; விமானம் மூன்று தளங்களால் ஆனது; இச்சதுரானன பண்டிதருடைய தூண்டுதலினால் இத்திருப்பணி செய்யப்பெற்றது.[5]

---

[1] 104 of 1912; 399 of 1896 S. I. I, V 1354.

[2] முதலாம் இராசேந்திரன் மார்கழித் திருவாதிரை நாளில் பிறந்தவன். (திரு. பண்டாரத்தார் - பிற்காலச் சோழர் சரித்திரம் பாகம் I பக்கம் 139.

[3] மன்றாடிகள் - ஆட்டிடையர்.

[4] அருமொழி தேவன் நாழி - முதல் ராசராசன் பெயரால் வழங்கிய நாழி.

[5] 105 of 1892, S. I. I. IV 553; 126 of 1912.

சோழன் (1070 - 1118) காலத்தில் இன்னும் ஒரு சதுரானன பண்டிதரைப்பற்றிக் கேள்விப்படுகிறோம். இச் சோழனது 7-ம் ஆட்சியாண்டு 290-வது நாளில் அதிகாரிகளில் குளமுழார் ஏறன் கூத்தானுரான ராசராச மூவேந்த வேளார், திருவொற்றியூர்க்கோயிலில் ராசராசன் மண்டபத்தில் கோயில் கருமம் ஆராயவிருந்து. திருவொற்றியூர்க் கோயிலுக்குரிய தேவதான ஊர்களின் கணக்குகளைப் பரிசீலனை செய்து 125 காசு கோயிலுக்கு வரவேண்டும் என்பதைக் கண்டறிந்தார்,[6] இத் தொகையை வீரராஜேந்திரன் திருப்பள்ளி யெழுச்சிக்குவேண்டும் நிபந்தங்களுக்கு நிபந்தம் செய்து கொடுக்க என்று உத்தர விட்டார்; புரவுவரித்திணைக் களத்துக் கணக்கு[7] பாலையூர் கிழவன் கம்பன் சீலமையனும். சீராளன் கண்டராச்சனும், மடமுடைய சதுரானன பண்டிதனும் இருந்து நிபந்தம் செய்தார்கள்.[8]

இங்ஙனம் சதுரானன பண்டிதர் என்ற பெயர் தாங்கிய மடபதிகள் பலர் திருவொற்றியூரில் இருந்து, கோயில் காரியங்களை மேற்பார்வை செய்து, அரசர்களால் மதிக்கப்பெற்றுச் சிறந்து விளங்கினர் என்று அறியப்பேறுகின்றது. இவர்கள் தலைமை பூண்டிருந்த மடமும் சதுரானன பண்டிதர் மடம் என்றே வழங்கப்பெற்றது.[9]

இனி இரண்டாம் இராசாதிராசன் காலத்தில் மடமுடையவர் ஆக இருந்தவரும் சதுரானன பண்டிதன் என்றே அழைக்கப் பட்டார். இச்சதுரானன பண்டிதரும் அரசரால் நன்கு மதிக்கப் பெற்றவர்: கோயில் காரியங்களை மேற்பார்வை செய்தவர்; இரண்டாம் இராசாதிராசன் மகிழடி சேவையைத் தரிசித்த காலத்தில் உடன் இருந்தவர்; இக்கல்லெழுத்தில் முதலில் கையெழுத்து இட்டவர் ஆகவும் இவர் காணப்பெறுகிறார்.

---

[6] இந்நாளில் கோயிற் கணக்குகளை. அரசியலார் நியமிக்கும் கணக்குப் பரிசோதகர், பரிசீலனை செய்தலை இங்கு ஒப்பிட்டு நோக்குக,

[7] புரவு வரித்திணைக் களம்,- அரசாங்கத்து வரிக்கணக்கு வைத்திருக்கும் குழு.

[8] 401 of 1896, S. I, I. V 1356; 130 of 1912.

[9] ஞானமிருதம்: பக்கம் XXXIV.

வாகீசுவர பண்டிதர்

திருவொற்றியூரில் மேற்குறித்த மகிழடி சேவைக்காலத்தில் அரசனோடு உடன் இருந்தவர்களில் நான்காமவராகக் குறிக்கப் பெற்றவர், சோமசித்தாந்தம் வக்காணிக்கும் வாகீசுவர பண்டிதர் எனப் பெற்றார். இவ்வாகீசுவர பண்டிதர் கோடலம் பாகை [10] என்னும் ஊரினர்; கோடலம் பாகையிலிருந்தவரும் அருண்மொழித்தேவர் [11] என்னும் பெயரினரும் ஆய பரமானந்த முனிவர் என்பாரிடம் சிவஞானோபதேசம் பெற்று சிவஞானம் நிறைந்து விளங்கினவர்; பின்னர்த் திருவொற்றியூர்க்குச் சென்று சோமசம்பு சிவாசாரியார் முதலியோர் வகுத்த பத்ததிகளையும் பிறவற்றையும் மக்களுக்கு அறிவுறுத்துவாராயினர்;[12] இதனால் "சோமசித்தாந்தம் வக்காணிக்கும் வாகீசுவர பண்டிதர்" எனப் பெற்றார். இவர் அரசரும் அறிவரும் மதிக்கும் பெற்றியராய் விளங்கினர் என்பது ஒருதலை.

---

[10], [11] ஞானமிர்தம் 28, வரி 26 - 30; பாடல் சான்ற பல் புகழ் நிறீஇ, வாடாத்துப்பின் கோடலாதி. அருளா பரணன் அறத்தின் வேலி, பொருண்மொழி யோகம் கிரியையிற் புணர்த்த அருணமொழி திருமொழி போலவும்" என்ற நூற்பகுதியும், "கோடல் என்றது கோடலம் பாகை என்னும் ஊர் அருண் மொழி என்பது ஸ்ரீ பரமானந்த முனிகளின் பிள்ளைத் திருநாமம்" என்ற உரைப் பகுதியும் காண்க.

[12] ஞானமிர்தம் - திரு. ஔவை, சு. து. பதிப்பு பக்கம் XXXIV.

EXTRACT FROM VISITORS' BOOK
Dharmapuram Adhinam
Sri Panchanadeeswaraswami Devasthanam, Tiruvaiyaru.

திருவையாறு கோயிலுக்கு வரவும், இறைவனை வழிபடவும் சமயம்பற்றி பேசவும் வாய்ப்பு பெற்றேன், இதனை எனக்குப் பெரும் பாக்கியமாக யான் கருதித் தருமபுரம் ஆதீனத்தாரைப் பாராட்டி நன்றி செலுத்துகிறேன். கோயில் தூய்மையாகவும் அமைதியான சூழ்நிலையிலும் வைத்திருக்கும் கட்டளைத் தம்பிரான் தொண்டு போற்றற்குரியது.

(ஒம்) ம. பொ. சிவஞானம்,
13—3—60.

செய்திகள்

தருமையாதீனத்தில் ஏகதின லக்ஷார்ச்சனை

நிகழும் சார்வரி ஆண்டு சித்திரைத் திங்கள் 1 ஆம் நாள் (13—4—60) புதன்கிழமை தருமபுரம், ஸ்ரீ ஞானபுரீசுவர சுவாமி திருக்கோயிலில் ஸ்ரீ ஞானபுரீசுவர சுவாமிக்கும், தருமபுரத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலக்ஷ்மி துர்க்கா தேவிக்கும் விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகளும் ஏகதின லக்ஷார்ச்சனையும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் அருளால் சிறப்புற நடைபெற்றன.

திருநாவுக்கரசு நாயனார் குருபூசை

21—4—60 வியாழக்கிழமை ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயிலில் திருநாவுக்கரசு நாயனார் குருபூசைத் திருநாளைக் குறித்து திருநாவுக்கரசு நாயனாருக்கு சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன. இரவு புஷ்பங்களால் அலங்கரிக்கப்பெற்ற மஞ்சத்தில் திருவீதி யுலாவும் தேவார இன்னிசைப் பாராயணத் துடன் நிகழ்ந்தது.

அன்று ஸ்ரீ சொக்கநாதர் ஆலயத்தின் முன்னர் திருநாவுக் கரசு நாயனார் புராண பாராயணம் செய்யப்பெற்றது.

ஸ்ரீ ஞானபுரீசுவரர் மகோற்சவம்

தருமையாதீனம் ஸ்ரீ ஞானாம்பிகா சமேத ஸ்ரீ ஞானபுரீசுவர சுவாமி திருக்கோயிலில் சார்வரி ஆண்டு சித்திரைத்திங்கள் 25 ஆம் நாள் (7—5—60) சனிக்கிழமை முதல் தொடங்கி மகோற்சவம் சிறப்பாக நடைபெறுகிறது. விழா நாட்களில் திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு ஆதீன மடாலய முகப்பில் நிகழ்கிறது. மாநாட்டில் அறிஞர்களின் சொற்பொழிவுகளும், கதாகாலக்ஷேபங்களும் இன்னிசைக் கச்சேரிகளும் நடை பெறுகின்றன. மாநாட்டு நிகழ்ச்சிகள் தொடர்ந்து வெளியிடப் பெறும்.

திருபுவனத்தில்

திருமுறை விழாவும், தேவார வகுப்பு ஆண்டு விழாவும்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருபுவனம் ஸ்ரீ கம்பகரேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் 14—4—60 வியாழக்கிழமை இரவு 6-மணிக்குத் திருமுறை விழாவும், தேவார வகுப்பு ஆண்டு விழாவும் சிறப்பாக நடைபெற்றன. திருமுறைகள் ஒப்பனை செய்யப்பெற்று யானைமீது பண்ணிசை வாணர்களின் பாராயணத்தோடு திருவீதி வலமாகக் கொணரப்பெற்றன. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் அருளால் தேவார வகுப்பு மாணவர்களுக்குப் பரிசுகளும் வழங்கப்பெற்றன.

தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி முதல்வர், முதுபெரும் புலவர் திரு. முத்து. சு. மாணிக்கவாசகர் அவர்கள் ''தோடுடைய செவி'' என்ற தலைப்பிலும், திருவையாறு அரசர்கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் வித்துவான், திரு. நா. இராமசாமிச் செட்டியார் அவர்கள் ''நெஞ்சம் உமக்கே இடம்'' என்ற தலைப்பிலும் சொற்பொழிவாற்றினார்கள்.

சித்திரைத்திங்கட் பெருவிழா

சீகாழியில்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானத்தில் சித்திரைத் திங்கட் பெருவிழா சார்வரி ஆண்டு சித்திரைத்திங்கள் 18 ஆம் நாள் (30—4—60) சனிக்கிழமை முதல் தொடங்கி 9—5—60 திங்கட்கிழமை முடிய உள்ள நாட்களில் மிக்க சிறப்பாக நடைபெற்றது. விழா நாட்களில் திருமுறை மாநாடும், இன்னிசைக் கதாகாலக்ஷேபங்களும் நிகழ்ந்தன. அறிஞர்கள் பலர் சொற்பொழிவாற்றினர். 1—5—60 ஞாயிற்றுக்கிழமை காலையில் திருஞானசம்பந்தருக்கு உமையம்மையார் ஞானப் பாலூட்டிய திருநாள் சிறப்புற நிகழ்ந்தது. அன்று தருமையாதீனம் 25 ஆவது ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றினார்கள். பல ஆயிரக் கணக்கான மக்கள் திரளாகக்கூடி தரிசித்து உய்ந்தனர்.

6—5—60 வெள்ளிக்கிழமை திருமுறை விழாவும் தேவார வகுப்பு ஆண்டு விழாவும் நடைபெற்றன. அன்று திருமுறைகள் யானை மீது ஒப்பனை செய்யப்பெற்று பண்ணிசை வாணர்களின் திருமுறைப் பாராயணத்தோடு திருவீதி வலமாகக் கோணரப் பெற்றன. தேவார வகுப்பு மாணவர்களுக்கு ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களின் அருளால் பரிசுகள் வழங்கப் பெற்றன.

திருப்பனந்தாளில்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திற்குச் சொந்தமான திருப்பனந்தாள் ஸ்ரீபிருகந்நாயகியம்பாள் சமேத ஸ்ரீஅருண ஜடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் சித்திரைத்திங்கட் பெருவிழா 30—4—60 முதல் 9—5—60 முடிய உள்ள நாட்களில் மிக்க சிறப்பாக நடைபெற்றது. 9—5-60 திங்கட்கிழமை பஞ்சமூர்த்திகளும் கொள்ளிடக்கரைக்கு எழுந்தருளி தீர்த்தம் கொடுத்தல் சிறப்புற நடைபெற்றது. அன்று எம்பார் பாகவதர் ஸ்ரீ விஜயராகவாச்சாரியார் அவர்கள் 'திருஞான சம்பந்தரின் வரலாற்றைக் கதாகாலக்ஷேபமாகச் செய்தார்கள். திரளானமக்கள் வந்து தரிசித்து தீர்த்தத்தில் மூழ்கியும் கதாகாலக்ஷேபத்தைக் கேட்டும், இருமைப்பயனும் பெற்றார்கள்.

5-5-60 வியாழக்கிழமையன்று திருமுறைவிழாவும் தேவார வகுப்பு ஆண்டுவிழாவும் நிகழ்ந்தன. அன்று திருமுறைகள் யானைமேல் ஒப்பனை செய்யப்பெற்று பண்ணிசை வாணர்களின் பாராயணத்தோடு திருவீதி வலமாகக் கோணரப்பெற்றன. தேவார வகுப்பு மாணவர்களுக்குப் பரிசுகளும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் அருளால் வழங்கப்பெற்றன. விழா நாட்களில் திருமுறை மாநாடு நிகழ்ந்தது. அறிஞர்கள் பலர் சொற்பொழிவாற்றினர்.

திருவையாற்றில்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருவையாறு ஸ்ரீ தர்மசம்வர்த்தனியம்பாள் சமேத ஸ்ரீ பஞ்சநதீசுவர சுவாமி தேவஸ்தானத்தில் 30—4—60 முதல் 9—5—60 முடிய உள்ள நாட்களில் சித்திரைத்திங்கட் பெருவிழா மிக்க சிறப்பாக நடைபெற்றது.

விழா நாட்களில் அறிஞர்களால் சமயச் சொற்பொழிவுகள் செய்யப்பெற்றன. அன்பர்கள் பலர் வந்து கண்டும் கேட்டும் உய்ந்தனர்.

திருக்கடவூரில்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்த மான திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானத் தில் 30—4—60 முதல் 9—5—60 முடிய உள்ள நாட்களில் சித்திரைத்திங்கட் பெருவிழா மிக்க சிறப்பாக நடைபெற்றது.

5—5—60 வியாழக்கிழமை அன்று காலசம்ஹார சேவை. காலசம்ஹாரமூர்த்தி நூற்றுக்கால் மண்டபத்தில் இருந்து எழுந்தருளும் காட்சி கண்டு மகிழத்தக்கது. அன்று ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழி பாடாற்றினார்கள். பக்தர்களும் திரளாகவந்து வழிபட்டுய்ந்தனர். விழா நாட்களில் சமயச் சொற்பொழிவுகளும், கதாகாலக்ஷேப மும் சிறப்புற நிகழ்ந்தன.

ஸ்ரீ காலசம்ஹாரமூர்த்தி சந்நிதித் திருவாயில்
வெள்ளிக்கதவுத் திறப்புவிழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்த மான திருக்கடவூர் ஸ்ரீஅமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் 13—4—60 புதன்கிழமை இரவு 7-மணிக்குத் தருமையாதீனம் இருபத்தைந்தாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் அருளால் ஸ்ரீ காலசம்ஹாரமூர்த்தி சந்நிதித் திருவாயில் வெள்ளிக் கதவுத் திறப்புவிழா மிக்க சிறப்பாக நடைபெற்றது. அன்று ஸ்ரீ காலசம்ஹாரமூர்த்திக்கு சஹஸ்ரநாமார்ச்சனையும் நடைபெற்றது. அன்பர்கள் பலர் வந்து வழிபட்டனர்.

மாயூரம் ஸ்ரீகுருஞானசம்பந்தர்
வார வழிபாட்டுக் கழகத்தின் வாரவழிபாடும் பாராட்டும்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்த மான திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானம், வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானம், சீகாழி

ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம், ஆச்சாள்புரம் ஸ்ரீ சிவலோகத்தியாகராஜசுவாமி தேவஸ்தானம் ஆகிய தேவஸ் தானங்களில் முறையே 10—4—60, 24—4—60, 1—5—60, 8—5—60 ஆகிய நாட்களில் வழிபாடு சிறப்புற நிகழ்ந்தது. 17—4—60 ஞாயிற்றுக்கிழமையன்று திருவாவடுதுறை ஆதீனத் துக்குச் சொந்தமான ஸ்ரீ மாயூரநாதசுவாமி திருக்கோயிலில் வழிபாடு நடைபெற்றது. அன்பர்களும், உறுப்பினர்களும் வந்து தரிசித்து உய்ந்தனர்.

சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானத்தில் திருமுலைப் பால் திருவிழாவன்று (1—5—60இல்) வழிபாடு நிகழ்ந்தது அவ்வமயம் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் செந்தமிழ்க் கல்லூரி முதல்வர் சிவநெறிச்செல்வர், வித்துவான், திரு. K. M. வேங்கடராமையா M. A., B. O. L. அவர்களுக்குப் பொன் னுடை போர்த்தி 1000 வெண் பொற்காசுகள் அளித்துச் சிறப்பித்தமையையும். வித்துவான். திரு. தா. ம. வெள்ளை வாரணம் அவர்களுக்குக் குடந்தையில் சிவனடியார் திருக் கூட்டத்தினர் ''மதுரகவி'' என்ற பட்டம் அளித்தமையையும் சிறப்பிக்க, மாயூரம் ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்தர் வாரவழிபாட்டுக் கழகத்தின் சார்பில் ஓர் பாராட்டுக்கூட்டம் நிகழ்ந்தது. இருவ ருக்கும் தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் பொன்னுடை போர்த்து ஆசியருளினர்கள். வாரவழி பாட்டுக் கழகத்தினரின் சார்பில் பாராட்டுரைகளும் வாசித்து அளிக்கப்பெற்றன. பலர் அவ்விருவரையும் பாராட்டிப்பேசினர்.

குத்தாலத்தில் மண்டலாபிஷேகப் பூர்த்தி விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்த மான குத்தாலம் ஸ்ரீ உக்தவேதீசுவரசுவாமி தேவஸ்தானத்தில் குடமுழுக்கு விழாவிற்குப் பின்னர் நிகழும் மண்டலாபிஷேக பூர்த்தி விழா 15—4—60 வெள்ளிக்கிழமை அன்று சிறப்புற நிகழ்ந்தது. அன்று ஸ்ரீ உக்தவேதீசுவர சுவாமிக்குப் பஞ்ச முகார்ச்சனையும், ஸ்ரீ அரும்பன்னவனமுலை அம்பாளுக்கு நவசக்தியர்ச்சனையும், ஸ்ரீ ஷண்முகருக்கு ஷண்முகார்ச்சனையும் மிக்க சிறப்புடன் நிகழ்ந்தன. விசேஷ அபிஷேக ஆராதனை களும், இரவு பஞ்மூர்த்திகள் திருவீதியுலாவும் நிகழ்ந்தன.

பிரசங்க மண்டபத்தில் மாலை 6 மணிக்கு வித்துவான். சிரோமணி, திரு. வி. சபேசன் அவர்கள் திருத்துருத்தியில் நாவுக்கரசர் என்ற தலைப்பிலும், திரு. ம. சிவசம்பு அவர்கள் திருத்துருத்தியில் சுந்தரர் என்ற தலைப்பிலும் சொற்பொழி வாற்றினர்.

பன்னிரு திருமுறைப் பாராயண பூர்த்தி விழா

குத்தாலத்தில் சிவனடியார் திருக்கூட்டத்தினர் ஸ்ரீ உக்த வேதீசுரர் ஆலயத்தில் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தின் திருவுள்ளப் பாங்கின்வண்ணம் 15—2—60 அன்று தருமைக் கல்லூரி முதல்வர் திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் பன்னிரு திருமுறைப் பாராயணத்தைத் தொடங்கிவைத்தார்கள்.

நாள்தோறும் மாலை 6 மணி முதல் 9 வரை பாராயணம் செய்து 15—4—60 ல் ஷை ஆலய மண்டலாபிஷேகதினத்தன்று பூர்த்தி செய்தனர். அன்றையதினம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் அருளாணையின் வண்ணம் திருமுறைகளை மஞ்சத்தில் வைத்து, தருமை ஆதீனம் தேவாரபாடசாலை ஆசிரியர், திரு. R. வேலாயுத ஓதுவாரும், அவரது கோஷ்டி யினரும் பன்னிரு திருமுறைகளை ஓதிக்கொண்டு திருவீதி வலம் வந்தனர்.

சென்னை, தருமபுர ஆதீன சமயப் பிரசார நிலையம் மாதாந்திர சமயப்பிரசார வழிபாட்டுக் கூட்டம்

சென்னை தியாகராய நகரில் உள்ள தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப்பிரசார நிலைய மாதாந்தர வழிபாட்டுக் கூட்டம் 1-5-60 ஞாயிறு காலை திருஇலம்பயம் கோட்டூரிலும், கூவம்என வழங்கும் திருவிற்கோலத்திலும் சிறப்பாக நடைபெற்றது. இரு திருக்கோயில்களிலும் அவ்வத் தலத்தின் தேவார திருப்பதிகங் களையும் சமயப்பிரசார நிலைய மாணவ, மாணவியர்கள் இசை யுடன் ஓதி எல்லோரையும் இறைவழிபாட்டில் ஈடுபடுத்தினர். சமயப்பிரசார வழிபாட்டுக் கூட்டத்தினரை ஊர்ப்பொதுமக்களும் அறங்காவலர்களும் வரவேற்று திருக்கோயில் வழிபாட்டினை

உடனிருந்து சிறப்பாகச் செய்து வைத்தனர். அடியவர்களுக் கெல்லாம் அறங்காவலர் சுந்தரேச முதலியார் அவர்கள் மாகேஸ் வர பூஜையும், மாலை சிற்றுண்டியும் அளித்துப் போற்றினார்கள். மாலை 4 மணிக்கு ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் தலைமையில் பிரசாரக்கூட்டம் தொடங்கி நடைபெற்றது. நல்ல கருத்துக்கள் நாட்டில் பரவுவதற்கு இவ் வழிபாட்டுக் கூட்டம் பலன் அளித்து வருகிறது என்றும், வழிபாட்டாலும் சமயப் பிரசாரத்தாலும் வாழ்விற்கு வேண்டிய பலவகை நலன்களும் நம்மை வந்தடைகின்றன என்றும், திருஞானசம்பந்தர் தமது உரையினை இறைவன் தனது உரையாகக் கொண்டான் என அறிவிக்கின்ற திருப்பதிகத்தையுடைய தலம் இலம்பயங் கோட்டூர் என்றும், இறைவன் திரிபுர தகனம் செய்த காலத்தில் ஏறிச் சென்ற தேரின் (கூவரம்) ஏர்க்கால் ஒடிந்த இடம் கூவம் என்றும், தேவர்கள் நாம் இல்லாமல் இறைவன் ஒன்றும் செய்ய இயலாது என்று எண்ணினர். இவ்வெண்ணம் தவறுனது என் பதை உணர்த்தவே ஏர்க்கால் முறியுமாறு இறைவன் அருள் செய்து சிரிப்பினுல் திரிபுரத்தை எரித்தார்கள் என்றும், தலைமை யுரையில் சுவாமிகள் குறிப்பிட்டார்கள்.

திரு. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள், ஸ்ரீமத். ஐயாறு அடிகள், திரு. ஏகாம்பர முதலியார் எம். எல். ஏ., திரு. ச. சிவ குமாரன் அவர்கள் முதலியவர்கள் பெரிய புராணம் பற்றியும், தேவார திருவாசகங்களின் மேன்மை பற்றியும் பேசினார்கள். திரு. வைத்தியலிங்க முதலியார் அவர்கள் திருக்கோயில் சார்பில் ஒரு வரவேற்புரை வாசித்தளித்தார்கள். வித்துவான், திரு. க. சம்பந்த முதலியார் அவர்கள் நன்றி தெரிவித்தார்கள்.

அடுத்த மாத சமயப்பிரசார வழிபாட்டுக் கூட்டம் 5-6-60 ஞாயிறு அன்று தக்கோலம் என வழங்கும் திருவூறலில் நடை பெறும் என்றும் அறிவித்தார்கள். கடவுள் வாழ்த்துடன் கூட்டம் நிறைவுற்றது.

திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு

[திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் ஸ்ரீ ஞானம்பிகா சமேத ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி கோயில் திருவிழாவின் போது 7—5—60 முதல் 17—5—60 முடிய உள்ள நாட்களில் நிகழ்ந்த திருநெறிய தெய்வத் தமிழ மாநாட்டின் நிகழ்ச்சிகள்.]

7—5—60 சனிக்கிழமை திருஞானசம்பந்தர் திருநாள்

திரு ஒ. வி. அளகேசன் அவர்கள் (தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர், சென்னை) ஆற்றிய தொடக்கவுரையின் சுருக்கம்.

திருஞானசம்பந்தர் சைவ சமயத்தின் முதல்வர். சைவ சமயாசாரியர் நால்வரிலும் முதல்வராகவே வைத்து எண்ணப் பெறுகிறார். ஆனால் வயதால் சிறியவர், தொண்டால் பெரியவர். அவரால் சைவசமயத்திற்கு ஏற்பட்ட நன்மைகள் பல. சம்பந்தர் அரசியலில் புகுந்து பாண்டியன் சமயத்தையே (சமண சமயத்தை) மாற்றினார். சமணம் ஓங்கியிருந்த காலத்து சைவ சமயத்தை மேலோங்கச் செய்து சமயத்தொண்டாற்றினார் சம்பந்தர்.

மக்களை மீட்ட இந்து மதத்தில் பெரியோர்கள் அவ்வப் போது தோன்றினர். அவர்கள் இல்லையேல் நாமும் நமது சமயமும் இல்லை. சமய குரவர்கள் சமயம் தழைக்க வழி செய்தனர்.

திருநாவுக்கரசு சுவாமிகள் வயதில் பெரியவர். அவர் முதலில் சைவ சமயத்திலிருந்து சமணம் சார்ந்து அவரது ஆட்சியில் தலைசிறந்து விளங்கினார். சைவரானபோது பல துன்பங்களை ஏற்றார். பொறுமையால் சமணத்தை வென்ற அவர் "நாமார்க்கும் குடி அல்லோம்" என்று பாடுகிறார். தேவாரம் எப்படி பிறந்தது? திருநாவுக்கரசர் வயிற்றுவலி பொறுக்காமல் "கூற்றாயினவாறு" என்ற பாடலைப் பாடினார்.

அது துன்பத்தில் பிறந்தது. சம்பந்தர் குழந்தை. அக் குழந்தை குளக்கரையில் அழுகிறது. அம்மையார் பொற் கிண்ணத்தில் திருமுலைப்பால் அளிக்க அதை உண்டு மகிழ் கிறது குழந்தை. பின்னர் தந்தையின் கோபம் குழந்தையை "யாரளித்த பாலடிசில் உண்டாய் என அச்சுறுத்துகிறது. அப் பொழுது உண்டாகியது அச்சம்." அச்சத்தால் வெளி வரு கிறது. "தோடுடைய செவியன்" என்ற பாடல். திருமணக் காலத்தில் இறைவனால் தடுத்து ஆட்கொள்ளப்பெற்று அடிமை யானார் சுந்தரர் திருவெண்ணெய்நல்லூரில். அப்பொழுது துன்புற்ற சுந்தரருக்கு இறைவன் அருள் செய்கின்றார்; "சொற்றமிழ் பாடுகென்றார் தூமறை பாடும் வாயால்." பின்னர் பாடுகின்றார் சுந்தரர் "பித்தா பிறைசூடி... என்று. இப்பாடலும் துன்பத்தால் வெளிவந்ததே.

சம்பந்தர் தன்னைப்பற்றிக் குறிப்பிடும்போது பதிகத்தின் கடைசிப் பாடலில் 'முத்தமிழ் நான்மறை ஞானசம்பந்தன்' என்று குறிப்பிடுகிறார். நாவுக்கரசர் "ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்" "வடமொழியும், தென்தமிழும் மறைகள் நான்கும் ஆனவன்காண்" என்று குறிப்பிடுகிறார். இதனால் நாம் அறிவது இருமொழியும் அவசியம்வேண்டும். பகைமையுணர்ச்சி கூடாது" என்பதாகும்.

மங்கையர்க்கரசியாரிடமிருந்து சம்பந்தருக்கு அழைப்பு வருகிறது பாண்டிய நாட்டிலிருந்து. புறப்படுகிறார் சம்பந்தர். அப்பர் வேண்டாம் எனத் தடுக்கிறார். அப்போது சம்பந்தர் "வேயுறு தோளிபங்கன்" என்ற பதிகத்தைப்பாடி புறப்பட்டுச் செல்கிறார். சைவ சமயத்தைத் தோற்றுவிக்கிறார். மதுரை மக்கள் சம்பந்தரைக் கண்ட காட்சியை

ஞானத்தின் திருவுருவை நான்மறையின் தனித்துணையை
வானத்தின் மிசையன்றி மண்ணில் வளர்மதிக் கொழுந்தை
தேனக்க மலர்க்கொன்றை செஞ்சடையார்சீர் தொடுக்கும்
கானத்தின் எழுபிறப்பைக் கண்களிப்பக் கண்டார்கள்.

என்று அருள் செய்கின்றார்.

திருக்கயிலாய யாத்திரை முதலியன செய்து ஞானத்தின் திருவுருவாக எழுந்தருளியிருக்கின்ற ஸ்ரீலஸ்ரீ கயிலை குருமகா சந்நிதானம் அவர்கள் சைவமும் தமிழும் தழைக்க செய்வதை.

யறிந்து மகிழ்கிறேன். போற்றுகிறேன். அவர்களுக்கு எனது வணக்கங்கள்.

வித்துவான் திரு. வீ. உலகஊழியர் அவர்கள் விலையுடை அருந்தமிழ் என்ற தலைப்பில் பேசியதன் சுருக்கம்:-

அலைபுனல் ஆவடுதுறை அமர்ந்த
இலைநுனை வேற்படை யெம்இறையை
நலமிகு ஞானசம்பந்தன் சொன்ன
விலையுடை அருந்தமிழ் மாலைவல்லார்
வினையாயினநீங் கிப்போய் விண்ணவர் வியனுலகம்
நிலையாகமுன் ஏறுவர் நிலமிசை நிலையிலரே.

திருஞானசம்பந்தரிடம் தந்தையார் (சிவபாத விருதயர்) திருவாவடுதுறையில் சிலநாள் தங்கியிருந்தார். வேள்வி செய்ய வேண்டுமென்ற விருப்பால் பொருள்வேண்டி நின்றார். சம்பந்தரும் அந்தமில் பொருளாவன ஆவடுதுறையுள் எந்தையார் அடித்தலங்களன்றோ? என்று எழுந்து திருக்கோயிலினுள் சென்று வணங்கினார். இறைவனும் பத்துப் பாடல்கள் பாடும் வரை அருளியதாகத் தெரியவில்லை. பத்து பாடல்களிலும் "இதுவோஎமை யாளுமாறீவதொன் றெமக்கில்லையேல் அதுவோவுனதின்னருளால் ஆவடுதுறையரனே, என்றே பாடுகிறார். சேக்கிழாரும் இச்செய்தியை "நீள் நிதிவேண்டினார்க்கீவது ஒன்றும் மற்றிலேன் உன்னடி அல்லதொன்றறியேன்" என்றே பாடுவதாகக் குறிக்கின்றார். பதினோராவது பாடலில் பொருள் பெற்றார் என்ற குறிப்பு புலப்படும்படியாக "வினையாயின நீங்கிப்போய் விண்ணவர் வியனுலகம் நிலையாகமுன் ஏறுவர் நிலமிசை நிலையிலரே" என்று பாடுகின்றார் சம்பந்தர்.

சம்பந்தர் பொன்பெற்ற செய்தியை

மாயிரு ஞாலமெல்லா மலரடி வணங்கும்போலும்
பாயிருங் கங்கையாளைப் படர்சடை வைப்பர்போலும்
காயிரும் பொழில்கள்சூழ்ந்த கழுமல வூரர்க்கம்பொன்
ஆயிரங் கொடுப்பர்போலு மாவடு துறையனாரே.

என்று குறிப்பிடுகிறார் அப்பர். மேலும் "பூதமுன் விரைந் தகல்பீடத்து உச்சிவைத்தது பசும்பொன் ஆயிரக்கிழி ஒன்று", என்கிறார் சேக்கிழார். சம்பந்தர் தந்தை வேண்டியது ஆயிரம்.

அந்த ஆயிரமும் பேற்றூர். கூடுதலோ அல்லது குறைவோ இன்றிப் பேற்றூர்என்றே தேரியவருகிறது.

சுந்தரர் "திருநின்ற சேம்மையே சேம்மையாக் கோண்டவர் அப்பர்" என்று குறிப்பிடுகிறூர். சம்பந்தரைக் குறிக்கும்போது "வம்பரு வரிவண்டு மணநாற மலரும் மதுமலர் நற்கோன்றை யான் அடியலாற்பேண எம்பிரான் சம்பந்தன்" என்கின்றூர்.

திரு. பாஸ்கரத்தோண்டைமான் M. A. I. A. S. அவர்கள் 'உள்ளம் கவர்கள்வன்" என்ற தலைப்பில் பேசியதன் சுருக்கம்:- காலத்தால் அப்பர்சுவாமிகள் தேவாரம் முந்தியதாக இருந்தாலும் சீலத்தால் சம்பந்தப் பேருமாள் பாடிய தேவாரம் முந்திவைத்து எண்ணற்குரியது. சம்பந்தர் குழந்தைப் பருவத்திலேயே பேருமானிடம் காதல்கோண்டவர். உள்ளத்தைப் பறிகோடுத்துத் தூது அனுப்பியவர். இவர் தம் பாடல் பிள்ளைபேருமாள் ஐயங்கார் பாடிய பாடலை நினைப்பூட்டும். உள்ளம்தன்னை மறப்பதை ஷேக்ஸ்யர், கம்பர் போன்றவர் கூறுவர்: இராமனும் சீதையும் இதயமோத்த நிலையைக் அழகாக் காட்டுவர் கம்பர். அன்பு, அச்சம் இவற்றில் ஒன்றையேனும் நாம் மேற்கோண்டு கடவுளிடம் பக்தி சேலுத்தல்வேண்டும். இறைவனை நோயுடையார் மட்டிலும் மறவா தேத்தும் நிலையை சம்பந்தர் கூறுவர். காரைக்கால் அம்மையார் இறைவனை என் நேஞ்சத்தான் எனக்கூறுவர். பூசலார் உள்ளத்தில் இறைவனைத் திருக்கோயில்கட்டி எழுந்தருளுவித்தவர். திருமங்கை மன்னன் அரங்கநாதரிடம் காதல் கோண்டு பாடிய தலைவியைக்காட்டுகிறூர். அதுபோலவே சம்பந்தர் தம் காதலும் உள்ளம் பறிகோடுத்த நிலையைக் காட்டும்.

திரு. மீ. ப சோமசுந்தரம் அவர்கள் (சோற்போழிவு அமைப்பாளர் சேன்னை வானோலி நிலயம்,) 'ஞானப்பால்' என்ற தலைப்பில் பேசியதன் சுருக்கம் :-

இன்பத்தில் கவிதை பிறப்பது சிறிதளவுதான். துன்பத்தில் தான் கவிதை பிறக்கும். காலப்போக்கே கவிதையை உருவாக்கும். அக்கவிதைகள் விளைத்த அற்புதங்கள் பல. பாரதியார்க்கு நிலாவும், வானத்து மீனும் பால் போழிந்தன இடைக்காடர்க்கு உடலுக்குள் பால் பேருகியது. திருமூலர் பாற்பசு

ஐந்து வெறியடங்கிப் பால் சோறிந்த விந்தையைக் காட்டுவார். சம்பந்தர் அம்பிகையின் சிவஞானப்பாலால் கவிதைகள் பொழிந்தார். அம்மையின் திருமுலைப்பால் தமிழ் வெள்ளமாகப் பெருகியது.

8—5—60 ஞாயிற்றுக்கிழமை திருநாவுக்கரசர் திருநாள்

வித்துவான், ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள், அவர்கள் 'உமாபதிசிவம்' என்ற தலைப்பில் பேசியதன் சுருக்கம்:-

தில்லை ஆண்டவனைத் தீண்டி வழிபடும் பேறுபெற்ற அந்தணர் குலத்திலே அவதரித்தார். பழைய குலமுறைப்படி பூசை முடித்து சிவிகையில் ஏறிவர, ஆட்கள் தீவட்டிகளுடன் முன் சென்றனர். இதைக் காண்கிறார் மறைஞானசம்பந்தர் வீட்டின் திண்ணையிலிருந்து. தனது சீடர்களிடம் ஏளனமாகப் 'பட்ட கட்டையிலே பகற்குருடு ஏகுது பாரீர்' என்றார். காதில் இவ்வார்த்தைகள் பட்டவுடன் சிவிகையினின்றும் இறங்கிவந்து மறைஞானசம்பந்தர் காலில் விழுந்து வணங்கினார்; சீடராக அவரிடம் இருந்தார். ஒருநாள் ஆசிரியர் ஒரு வீட்டில் கஞ்சி வார்க்கச் சொல்லி - தனது கைகளைச் சேர்த்துக் குடித்தார். உமாபதிசிவம் ஆசிரியர் கைவழி ஒழுகிய கஞ்சி நீரை - மிச்சிலை (பரிகலத்தை) ஆவலுடன் தனது கைகளைச் சேர்த்து உண்டார். ஆசிரியரிடம் அளவற்ற பக்தி அன்பு கொண்டார். இந்த நிகழ்ச்சிகளை எல்லாம் கேள்வியுற்ற தில்லைவாழ் அந்தணர்கள் - உமாபதிசிவத்தை ஆண்டவனைப் பூசிக்க அனுமதிக்கவில்லை. மறுநாள் கோயில் சென்றனர் அங்கு ஆண்டவனைக் காணாது திகைத்தனர் - அசரீரி ஒன்று - 'யாம் உமாபதிசிவம் பேட்டகத்தில் உள்ளோம்' - என்றியம்பியது கேட்டு வியப்புடன் உமாபதி சிவத்தின் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டனர். அவரை அழைத்து வந்த பிறகே 'கொடி' - ஏறிற்று. அவர் 'கொடிக் கவி' - பாடினார் ஹஸ்த நாளில் இந்தப் பெரியவர் சிவனடி அடைந்தார். சைவத்திற்குச் சிறந்த நூல்கள் பல இவரால் எழுதப்பட்டுள்ளன.

வித்துவான், திரு. சி. அருணைவடிவேல் முதலியார் அவர்கள் 'திருநேரிசையும் திருவிருத்தமும்' என்ற தலைப்பில் பேசியதன் சுருக்கம்:-

'ஒரு நாவுக் குரை செய்ய ஒண்ணுது' - என்று சேக்கிழார் கூறும்படி புகழ் அமைந்த நாவுக்கரசரின் நாலாம் திருமுறையில் பண்கள், திருநேரிசை. திருவித்தம் - என்ற மூன்று பகுதிகள் உண்டு. திருநேரிசையில்,

" அத்தா உன் ஆடல் காண்பான் அடியனேன் வந்தவாறே'

என்கிறுர். சேக்கிழார் கூறுவது போல 'ஊனுலும் உயிராலும் உள்ள பயன் கோள நினேந்து' - தில்லே வந்து வணங்கினுர்.

அந்த ஆனந்தத்தில் முகிழ்த்த பாடல் தான் 'குனித்த புருவமும்' என்று தோடங்கும் பாடல்.

வித்துவான், திரு. லே. ப. கரு. இராமநாதஞ் செட்டியார் அவர்கள் (தமிழ்த்துறைத் தலேவர். அண்ணுமலேப் பல்கலேக் கழகம்) 'தாண்டக வேந்தர்' என்ற தலேப்பில் பேசியதன் சுருக்கம் :-

நாவுக்கரசரின் ஆறும் திருமுறை - தாண்டகப்பாக்களால் ஆனது. 'தாண்டக வேந்தர்' - என்ற பட்டத்தை சிவப் பிரகாசர் அருளினுர். ஆனுல் சேக்கிழாரே குங்கலியக்கலய நாயனுர் வரலாற்றில் 'சில பகல் கழிந்தபின்பு' ... என்று தோடங்கும் பாவில் 'தாண்டகச் சதுரர்' – என்கிறுர். இதைக் கோண்டுதான் சிவப்பிரகாசர் தாண்டகவேந்தர் என்று கூறினுர். அடியார்க்கு அடிமை என்றுதான் சுந்தரர் கூறுகிறுர்,

" திருநின்ற சேம்மையே சேம்மையாகக் கோண்ட
திருநாவுக் கரையன் றன் அடியார்க்கும் அடியேன் "

" ஒருநம்பி அப்பூதி அடியார்க்கும் அடியேன் "

தாண்டகம் - பாவில் ஒருவகை.

திருமங்கை ஆழ்வார் பாடல்களில் அறுசீர்கழிநேடிலடி ஆசிரிய விருத்தப் பாக்கள் - திருக்குறுந்தாண்டகம் எண்சீர் கழிநேடிலடி ஆசிரிய விருத்தம். திருநேடுந்தாண்டகம் என்றும் சோல்லப்படுகின்றன.

அப்பர் சுவாமிகள் பாடல் எண்சீர் கோண்டது. ஆக திருநேடுந்தாண்டகத்தை ஒத்தது. தாண்டக வேந்தரை -

சம்பந்தர் 'அப்பர்' என்றழைத்தார் அதுமுதல் அவர் அப்பராஞர். பழையாறையில் மூடி வைத்திருந்த இலிங்கத்தை உண்ணு நோன்பிருந்து வெளிக்கொணர்ந்தார் அப்பர். 'சிங்கமே உன்னடிக்கே போதுகின்றேன்! என்று சொல்லி திருப்புகலூரில் முத்தியடைந்தார். தாண்டகத்தில் இறைவனியல்பு பேசப்படு கிறது. 'மைப்படிந்த கண்ணாளும்' என்ற பாவில் 'இப்படியன் இவ்வண்ணத்தன் இந்நிறத்தன் இவனிறைவன் என்று எழுதிக் காட்டொணுதே' - என்கிருர். 'பெற்றிருந்த தாயவளின் நல்லாய் நீயே'! என்கிருர் அப்பர்.

'தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே' - என்ற ஈற்றடி யில் தாளையும் தலையையும் இணைத்துப் பாடியுள்ள முறை - சைவ சமயத்தில் உள்ள ஒரு சிறந்த முறையை நினைப்பிக்கிறது.

தாள் + தலை - சேரும்போது 'தாடலை' ஆகிறது ஆண்ட வனிடம் உயிர்கள் சேரும் முறை சைவத்தில் 'தாடலை' எனப் படும். இப்படி சிறந்த பல கருத்துக்கள்கொண்ட தாண்டகப் பாக்களின் 'வேந்தர்' - இவர் என்பதில் ஐயமில்லை 4, 5, 6 திருமுறைகள் இவர் பாடியவைகளாகும்.

திருவாளர், சா. கணேசன் அவர்கள் காரைக்குடி. 'திருக் கோயிற் கலை' என்ற தலைப்பில் பேசியதன் சுருக்கம் :-

நமது கோயில்கள் எல்லாம் நமது சொத்துக்கள். நமது கலாசாரம் பண்பாடு, நாகரீகம் இவற்றை விளக்கும் கலைக் கூடங்கள் பண்டு கோயில் கட்டும்போதே கற்றல் - ஈட்டல். ஈட்டும்போது கற்றல் என்ற முறை பண்டு இருக்கிறது. எந்தத் தொழிலிலும் படிமுறை உண்டு. சிற்பத்தில் சூத்திரக்கிராகி தச்சன், வர்த்தகி, ஸ்தபதி என்ற முறை உள்ளது. தீர்த்தம், தலம், மரம், மூர்த்தி என்ற நான்கும் ஒவ்வொரு கோயிலுக்கும் உரிய சிறப்பு. ஆரியர்களால் விக்ரக வழிபாடு ஏற்பட்டிருக்க முடியாது. மோஹஞ்சதாரோ (கி. மு. 3000)வில் சைவ சமயக் கடவுளர்களின் படிமங்கள் கிடைத்துள்ளன.

பண்டு கோயில்களை ஆறு, குளம் இவற்றின் அருகில் அமைத்தனர். கடவுளுக்குப் பதிலாக வேல் சூலம் போன்றவை களை நட்டு வழிபட்டனர். பின் மரத்தால் கோயில் செய்தனர்.

இதை அம்பலம் என்பர். பின்பு 'மண்தளி'கள் எழுந்தன, பரவையுள் மண்டளி அம்மானே' என்கிறூர் - சுந்தரர். பின்பு மண்ணைச்சுட்டு 'சுடுமண்' ஆக்கித் தளி அமைத்தனர். மகேந்திர பல்லவன் காலத்தில் கி. பி. 615, 630 ' குடைவறைக் கோயில் எழுந்தது. இது 'மண்டபப்பட்டு' என்ற இடத்தில் உள்ளது. பின் அவன் மகன் நரசிம்மன் 'ஒற்றைக்கற்றளி' அமைத்தான். உண்டு. கட்டிட வகையில். சிற்பம், ஓவியம் எல்லாம் ஒன்று தான். அதனுல்தான் அப்பர் 'இவனிறைவன் என்றெழுதிக் காட்ட ஒண்ணுது' என்கிறுர்.

கல்விகற்கப் பண்டு கலாசாலைகள் இல்லை. கோயில் வேலைகளைச் செய்யும் ஒருவன் அந்த வேலைக்குரிய சொற்களை எல்லாம் கற்று உழைப்பால் முன்னேறி உயர்பதவி அடைந்து வருவாயைப் பெருக்கிக் கோள்வான். அப்படிப்பட்ட கலைக் கோயில்களைக்காப்பது நமது கடமை.

'இந்நாட்டைப் புனிதப்படுத்தும் ஆயிரக்கணக்கான கோயில் களை என் உயிரைக் கொடுத்தேனும் காப்பாற்றும் ஆற்றலை ஆண்டவன் கொடுத்தருளுவாளுக!' என்று காந்திமகான் கூறி யுள்ளார்.

(தொடரும்)

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Velur Sri Vaithianathaswami Devasthanam

Vaithiswarankoil

I was fortunate to visit this temple with my family and had good Darshan. The temple is kept extremely neat and clean and is well maintained. I am most greatful to the temple authorities for all the facilities afforded to me.

(Sd.) V. RAJAGOPALAN,
(Ministry of External Affairs, New Delhi.)
21—7—59.

எதிர்காலம்

ஜோதிஷார்ணவம், பிர்மஸ்ரீ. கே. முத்துஜோதிடர் அவர்கள்,
திருவிடைமருதூர்.

(சார்வரி௵ வைகாசி மாதம் 1௳ முதல் 31௳ முடிய)
(14—5—60 முதல் 13—6—60 முடிய)

1. மேஷம். அசுவதி - பரணி - கார்த்திகை $\frac{1}{4}$

அசுவதி முதல் பாதம் சுகபோக பாக்கியங்களைத் தரும். 2, 3, 4 பாதங்களும், பரணி முதல் பாதமும் சந்தோஷம் ஆடையாபரணச் சேர்க்கை, கல்யாண வைபவங்கள், இல்லற சுகம் ஏற்படும். பரணி 2, 3, 4 பாதங்களும், கார்த்திகை முதல் பாதமும் சுபமிராது. ரோக சத்ருபாதைகளைத் தரும். 'வீண் அலைச்சல் மனஸ்தாபம் ஏற்படச்செய்யும் ; வியாழன், வெள்ளி சுபமாகும்.

2. விருஷபம். கார்த்திகை $\frac{3}{4}$, ரோஹிணி - மிருகசீர்ஷம் $\frac{1}{2}$

ரிஷப ராசி ஒன்பது பாதங்களும் சமபலனாகவே நடக்கும். ஆரோக்கியக் குறைவு, தன நஷ்டம், கீர்த்தி பங்கம் குடும்பத் தொல்லை, அதிக விரயம் இவைகளை உண்டுபண்ணும். ஈதி பாதைகள் அதிகமாகும். தெய்வபலம் உள்ளவர்கள் சுகம் அடைவார்கள். திங்கள், புதன் சுபமாகும்.

3. மிதுனம். மிருகசீரிஷம் $\frac{1}{2}$, திருவாதிரை - புனர்பூசம் $\frac{3}{4}$

மிருகசீர்ஷம் 3, 4 பாதங்களும், திருவாதிரை 4 பாதங்களும் மிச்ர பலனைத்தரும் ; சில எதிர்பாராத நன்மைகள் கிட்டும், புனர் பூசம் 1, 2, 3 பாதங்கள் அதிக அலைச்சலை உண்டுபண்ணும், சத்ருபாதை நீங்கும், குடும்பத் தொல்லை அதிகமாகும், வியாழன் வெள்ளி சுபமாகும்.

4. கடகம். புனர்பூசம் $\frac{1}{4}$, பூசம் - ஆயில்யம்

புனர்பூசம் 4 வது பாதமும், பூசம் 4 பாதங்களும் உயர் பதவியைத்தரும். அசாத்தியமெல்லாம் சுலப சாத்தியமாகும்.

பரோபகார சிந்தனையும், கீர்த்தியும் உண்டுபண்ணும். ஆயில்யம் 4 பாதங்களும், தீராத விவகாரங்களை தீர்த்து வைக்கும். நஷ்டமான பொருள் வரத்தும் தொழில் மேன்மையும் ஏற்படும். சுப சோபனாதிகளில் தவக்கம் காட்டும். தெய்வ பலத்தால் கோரின பலன் கிடைக்கும், வெள்ளி, சனி சுபமாகும்.

5. சிம்மம். மகம் - பூரம் - உத்திரம் ¼

மகம் 4 பாதங்களும் உத்தியோகத்தில் உயர்வைத் தந்து மேலோர் பெரியோர்களின் அன்பைத் தரும். குடும்ப சுபம் ஓங்கும். பூரம் 4 பாதங்களும், உத்திரம் முதல் பாதமும் கார்யங்களில் தவக்கத்தைக் கொடுத்து ஈதிபாதைகளை உண்டு பண்ணும், மனம் சதா சஞ்சலமடையும், ஆரோக்கியக் குறைவையும், வீண் அலைச்சல்களையும் உண்டாக்கும், சனி, செவ்வாய் சுபமாகும்.

6. கன்னி. உத்திரம் ¾, ஹஸ்தம் - சித்திரை ½

உத்திரம் 2, 3, 4 பாதங்களும், ஹஸ்தம் முதல் பாதமும், உத்தியோக உயர்வைத் தரும். விசேஷ பொருப்புக்களையும், மேலோர் பெரியோர் அன்பையும் உண்டு பண்ணும். ஹஸ்தம் 2, 3, 4 பாதங்கள் விசேஷ கௌரவத்தைத் தந்து எவராலும் அடைய முடியாத பெரிய கௌரவாதிகளையும் மகோன்னத வைபவங்களையும் தான தர்ம பிரதிஷ்டா பலன்களையும் தரும். சித்திரை 1, 2 பாதங்கள் இல்லற சுகத்தையும் வெகுநாளாய் எதிர்பார்த்து நடவாத கார்ய சாதனங்களையும் நஷ்ட தன லாபத்தையும் தரும். வெள்ளி, சனி சுபமாகும்.

7. துலாம். சித்திரை ½, சுவாதி - விசாகம் ¾

சித்திரை 3, 4 பாதங்கள் சுபத்தைத் தராது, வீண் அலைச்சல்களைத் தரும். காரியங்கள் தவக்கப்படும் சுவாதி 4 பாதங்களும், விசாகம் 1, 2, 3 பாதங்களும் சுபமாகும். ராஜ சமானர்களின் பேட்டியையும் உந்நத பதவிகளையும், தொழில் ஏற்றத்தையும் குடும்ப சுகத்தையும் ஆரோக்கியத்தையும் தந்து

பூர்ண தெய்வீகத் தன்மையோடு விளங்கச் செய்யும். புதன், வியாழன் சுபமாகும்.

8. விருச்சிகம். விசாகம் $\frac{1}{4}$, அனுஷம் - கேட்டை.

விருச்சிக ராசி 9 பாதங்களும் மகத்தான சந்தோஷத்தைத் தந்து கிரஹ சுகம், ஜீவன சுகம் ஆரோக்யம் முதலியவைகளைத் தரும். மேலோர் பெரியோர்கள் அன்பு கிடைக்கும். தெய்வ பலம் ஓங்கும் நினைத்ததெல்லாம் கைகூடும். புதன், வியாழன் சுபமாகும்.

9. தனுசு. மூலம் - பூராடம் - உத்திராடம் $\frac{1}{4}$

மூலம் 4 பாதங்களும் மனம் சாந்தி இல்லாமல் ஓடும். துஷ்ட கிரஹம் விலகும். பூராடம் 4 பாதங்களும், உத்திராடம் முதல் பாதமும் விஜயத்தைத் தரும், கீர்த்தி ஓங்கும், தெய்வ பலம் பிரகாசிக்கும். விவஹாரம் ஜெயிக்கும். நஷ்டமான பொருள் வந்துசேரும். சதா தெய்வ சிந்தனை ஏற்படும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

10. மகரம். உத்திராடம் $\frac{3}{4}$, திருவோணம் - அவிட்டம். $\frac{1}{2}$

மகர ராசி 9 பாதங்களும் நன்மையை உண்டுபண்ணும், சுக ஜீவனம் தரும், உத்தியோகம் ஓங்கும். உலகில் நன்மதிப்பும் மலோர் பெரியோர் அன்பும் கிட்டும், தன தான்யப் பெருக்கும் ஏற்படும். வியாபாரம் ஓங்கும், சனி, சேவ்வாய் சுபமாகும்.

11. கும்பம். அவிட்டம் $\frac{1}{2}$, சதயம் - பூரட்டாதி $\frac{3}{4}$

அவிட்டம் 3, 4 பாதங்கள் தூர பிரயாணத்தைத் தரும். வித்தியா விருத்தியாகும். சதயம் 4 பாதங்களும், சுப சோபனுதிகளைத் தந்து அதிக செலவினங்களை உண்டுபண்ணும். மேலோர் பெரியோர்களுடைய அன்பும் விசேஷ லாபங்களும் உண்டு பண்ணும். தொழில் ஓங்கும். பூரட்டாதி 1, 2, 3 பாதங்களும் ஆரோக்கியத்தைத் தரும். ஆடை ஆபரணங்கள் சேரும். ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள் எதிர்பாராமல் கிடைக்கச்செய்யும். மனம் சந்தோஷம் அடையும், வியாழன், வெள்ளி சுபமாகும்.

12. மீனம். பூரட்டாதி $\frac{1}{4}$, உத்திரட்டாதி - ரேவதி.

பூரட்டாதி 4ம் பாதம் சம பலனைத் தரும். எந்தக் காரியமும் தவக்கமடையச் செய்யும். உத்திரட்டாதி 4 பாதங்களும் நஷ்ட தனம் தானாக வந்து சேரச்செய்யும், தொழில் ஓங்கும். வஸ்திராபரணச்சேர்க்கையும் கிரஹ சுகமும் நீடிக்கும், ரேவதி 4 பாதங்களும் கிரய விக்கிரயங்களும் தன லாபமும் கிரஹ வாஹன சுகங்களும் குடும்ப சுகமும் ஆரோக்கியமும் தரும். நினைத்ததெல்லாம் நடக்கச்செய்யும், வியாழன், வெள்ளி சுபமாகும்.

குறிப்பு :- வைகாசி மாதம் வித்யோத்தரதேசங்களில் ஈதிபாதைகளால் துன்பம் விளைவிக்கும். விலைவாசிகள் ஒரு நிலைப்படாது நாடெங்கும், சாந்தி இல்லாமல் நடக்கும், தெய்வ பலம் ஒதுங்கி நிற்கும். அன்பர்களின் திட பக்தியாலும், சாதுக்களின் குலாசார மதாசார தர்ம புத்தியாலும் உலகம் ஆபத்திலிருந்தும் விடுபட்டு ரக்ஷிக்கச் செய்யும்.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam
Velur Sri Vaithianathaswami Devasthanam,
Vaithiswarankoil

It is indeed fortunate on my part to have come across this temple because in these civilised (so called) days, it is very rarely that one is privileged to have the opportunity of feeling the presense of that Lord of Lords uninterrupted in a holy atmosphere. It is hoped that man will give up the fallacious notion of being or becoming the Master of the universe because that will never be. May I hope that those in charge of the temple will continue to manage it as it is being done now or better.

(Sd.) K. V. R. SWAMY IYER,
Ex-Private Secretary to the Ministery
of External affairs Kolalambur.
8—8—59. now living on Ritirement - Madras.

சென்னை சமயப்பிரசார நிலயத்தில்

அப்பர் சுவாமிகள் குருபூசைத் திருநாள்

திருநாவுக்கரசு நாயனுர் குருபூஜைத் திருநாள் தருமையாதீன சமயப் பிரசார நிலயத்தில் 21—4—60 அன்று மாலை சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. திரு. கீ. இராமலிங்க முதலியார் அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்தார்கள். திரு. ச. சிவகுமாரன் M.A.. அவர்கள் திருநாவுக்கரசர் வரலாறு பற்றியும், புலவர், ந, சி, குழந்தையம்மாள M. L. A., அவர்கள் அப்பர் தேவாரத்தைப்பற்றி யும் ஆராய்ச்சி விரிவுரை நிகழ்த்தினுர்கள். தலைவர் தமது தலைமை யுரையில் சமயாசாரியர்களின் குருபூஜைகளைக் கொண்டாட வேண் டியதன் அவசியத்தைப்பற்றியும் வற்புறுத்தினுர்கள் திரு, P. சுவாமி நாதன் கடவுள் வணக்கமும், வாழ்த்தும் பாடினுர்கள்.

வேலூர்க் கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா.

சமயப் பிரசார நிலயத்தில் 28—4—60 அன்று வைத்தீசுவரன் கோயில் கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா நடைபெற்றது. விழாவிற்கு செஞ்சிலுவைச் சங்கக் கௌரவச் செயலாளர் திரு. அமிர்தகணேச முதலியாரவர்கள் தலைமை வகித்தார்கள். திரு, P. சுவாமிநாதன் வேலூர்த் தேவாரப் பதிகங்களையும், பிள்ளைத்தமிழ்ப் பாடல்களையும் இசையுடன் பாராயணம் நிகழ்த்தினுர்கள், வேலூர்ப் பிரசாதங்களை எடுத்து வந்த தருமையாதீனம் சிவாகம பாடசாலைத் தலைமையாசிரியர் சிவஸ்ரீ சுவாமிநாத சிவாசாரியார் வழிபாட்டினைச் சிறப்பாக நிகழ்த்திப் பக்தர்கட்குப் பிரசாதங்கள் வழங்கினுர். தலைவர், தாம் இப்பிரசாதம் பெறும் உறுப்பினர்களில் தொடர்ந்து வருபவன் என்றும், இப் பிரசாதம் பெறுவதால் பல நலங்கள் கிடைத்துள்ளன என்றும் கூறினுர்கள். ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்பும் நன்றியும் கூறினுர்கள் திரு. P. சுவாமிநாதன் கடவுள் வாழ்த்துப் பாடினுர்.

உமாபதி சிவாசாரியார் குருபூசைத் திருநாள்

சமயப் பிரசார நிலயத்தில் 8—5—60 அன்று மாலை உமாபதி சிவாசாரிய சுவாமிகளின் குருபூஜைத் திருநாள் கொண்டாடப் பட்டது, விழாவிற்குத் தலைமை வகித்த திரு. நல்முருகேச முதலியாரவர்கள் சமயாசாரியர், சந்தாணுசாரியர் என்ற இருதிறத் தாசாரியப் பெருமக்களும் சைவ சமயத்தின் ஆசாரியர்களாவார்கள் என்றும், இவர்களது பூசைத் திருநாளைத் தமிழர்கள் சிறப்பாகக் கொண்டாடுவது கடமை என்றும் குறிப்பிட்டார்கள். புலவர், திரு. N. R. முருகவேள் M, A., M. O. L., அவர்கள் உமாபதி சிவாசாரிய சுவாமிகள் அருளிச்செய்த சித்தாந்த நூல்கள் என்பதுபற்றிய விரி வுரையை நிகழ்த்தினுர்கள். திருமதி. இராஜலட்சுமி B A , (Hons) அம்மையார் உமாபதி சிவனுரின் வரலாறுபற்றிச் சொற்பொழிவு ஆற்றினுர்கள்.

"ஞானசம்பந்தம்"

[சிறந்த திங்கள் வெளியீடு].

அரிய கட்டுரைகளுடன் வெளிவருகிறது !

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திலிருந்து பிரதி ஆங்கில மாதம் 10ந் தேதியன்று வெளிவருவது. சமய உண்மைப் பொருள் முதலியவற்றைக் குறித்த தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவசமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையாவது.

ஆண்டுக் கையொப்பம்

உள்நாடு ரூ. 1 — 50 வெளிநாடு ரூ. 2 — 00

சந்தாத்தொகையை கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பிவைக்கவும்

: செயலாளர் : :

"ஞானசம்பந்தம்" காரியாலயம்,

தருமபுர ஆதீனம் - மாயூரம் அஞ்சல் - தஞ்சை மாவட்டம்.

Printed & Published by K Sundaresa Iyer, Agent Dharmapuram Adhinam at the Gnanasambandam Press Dharmapuram. (Mayuram) 10 5—60.